பக்கங்கள் பத்து
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 20 சனிக்கிழமை (06-10-2001) தொலைபேசி 3378 ஒலி 299

## திருமலையில் கிளைமோர் இரு கடற்படையினர் பலி

(திருகோணமலை)

திருகோணமலை பாலக் கோட்டாறுப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரகிளைமோர்த் தாக்குதலில் சிக்கி இருகடற்படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பாலக் கோட்டாறுப் பகுதி பிரதான வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரே கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளனர்.

இவ் வீதியில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபடும் படையினரை இலக்கு வைத்தே கிளைமோர்த் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

கிளை மோர்த் தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகளுக்கும் கடற் படையினருக்குமிடையே மோதல் வெடித்துள்ளதாக திருமலைச்செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ)

## அரசியல் நிர்ணய சபைக்கு

# தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதியை தெரிவு செய்வதில் மீண்டும் குழப்பம்

## சங்கரி, செல்வம் கூட்டத்திலிருந்து வெளியேறினர்

(கொழும்பு)

17வது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் உருவாக்கப்படவுள்ள அரசியல் நிர்ணய சபைக்கு பத்துஉறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுகிறது.

இதனை அடுத்து அரசியல் நிர்ணய சபைக்கு 10 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 8ம் திகதி திங்கட்கிழமை வரை பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கு அரசு அவகாசம் வழங்கியுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் தமிழ்க்கட்சிகள் சார்பில் அரசியல் நிர்ணயசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட சட்டத் தரணி ஆர். இ. தம்பிரத்தினத்தை ஈ. பி. டி. பி

(10ம் பக்கம் பார்க்க)

## மட்டு-திருமலை ஆயர்மூலம் கரிகாலனை சந்திக்கமுயற்சி

[மட்டக்களப்பு]

விடுதலைப்புலிகள் மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனை சந்திப்பதற்கு ஏறாவூர் முஸ்லிம் சமூக பிரமுகர்கள் குழுவொன்று நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்குழுவினர் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்திப்பதற்கு முன்னேற்பாடாக மட்டக்களப்பு திருகோணமலை ஆயர்வணகிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களை நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

முஸ்லிம் பிரமுகர்களின் விருப்பத்துக்கு அமைய அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனைச் சந்திக்க அவருடன் தொடர்புகொண்டு உரியநடவடிக்கை எடுப்பதாக ஆயர் இச்சந்திப்பின் போது உறுதியளித்துள்ளாரென மட்டக்களபபு செய்திகள்தெரிவிக்கின்றன

இதேவேளை அண்மையில் ஆயர்கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கரிகாலனைசந்தித்து பேச்சு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - கடற்படையினர்

# முல்லைக் கடலில் பெரும் மோதல்!

## அதிகாலை முதல் மாலைவரை நீடித்தது

(நமது நிருபர்)

**முல்லைத்தீவு கடற் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைக் கடற் படையினருக்கும் இடையே நேற்றுப் பெரும மோதல்சம்பவம் ஒன்று வெடித்துள்ளது.**

**இம்மோதல் சமபவம் நேற்று அதிகாலை முதல் பிற்பகல் 5. 30 மணி வரையும் நீடித்த தாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

முல்லைத்தீவுக் கரையில் இருந்து 21 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கடற் பிரதேசத்தில் நேற்றுக் காலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதலின்போது விடுதலைப்புலிகளின் இரண்டு பாரிய படகுகளைக் கடற்படையினர் தாக்கி அழித்ததாகவும் அதில் இருந்த விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டு உள்ளனர் என்றும் இதன் போது கடற்படைவீரர் ஒருவர் பலியானதாகவும் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சரத்கருணா ரத்தின தெரிவித்துள்ளார்.

இம்மோதல் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்,

[illegible] குகள் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நடமாடியதை அடுத்து இம்மோதல் சம்பவம் இடம் பெற்றதாகவும் இம் மோதலின் போது கடற்படையினரின் அதிவேக டோறாப்படகு ஒன்று சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை ஆரம்பித்த மோதல் பிற்பகல் 5. 30மணி வரை நீடித்ததாக செய்தி

(10ம்பக்கம் பார்க்க)

## இத்தாலிக்குச் சென்ற 200 இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டனர்

[கொழும்பு]

இத்தாலிக்குள சட்டவிரோதமாக நுழைய முயன்ற சுமார் 200 இலங்கையர்கள் நாடு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்றுக்காலை அனிற்ராலிய விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் குற்றப் புலனாய்வுத்துறையினரால் விசாரிக்கப்பட்டுவருவதாக தெரிவித்துள்ளனர்.

இது குறித்து குற்றப்புலனாய்வுத் துறையினர் தகவல் தருகையில் யாழ்ப்பாணம் நீர் கொழும்பு வென்புரவு மாறவிலபகுதிகளைச் சேர்ந்த இவர்கள் நீர் கொழும்புக் கடலினூடாக படகுகள் மூலம் இத்தாலிக்குள் நுழைந்ததாகத் தெரிவித்தனர்.

இதேவேளை நெதர்லாந்திற்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற மூன்று இலங்கையர் உட்பட ஒன்பது

பட்ட மோதலின்போது விடு தலைப்புலிகளின் இரண்டு பாரிய படகுகளைக் கடற் படையினர் தகர்த்துவிட்ட

இம்மோதல் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்,

கடற்புலிகளின் பத்துப் பட

மோதல் பிற்பகல் 5. 30மணி வரை நீடித்ததாக செய்தி

(10ம்பக்கம் பார்க்க )

விமான நிலையத்தை வந்தி டைந்த இவர்கள் குற்றப் புலனாய்வுத்துறையினரால் விசாரிக்கப்பட்டுவருவதாக விமான நிலைய அதிகாரிகள்

இதேவேளை நெதர்லாந் திற்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற மூன்று இலங்கையர் உட்பட ஒன்பது

(10ம் பக்கம் பார்க்க)

# பொ.ஐ.ஐ. முன்னணி அமைச்சர்கள் எவரும் நேர்மையானவர்களல்ல

## ஜே. வி. பி. பிரசார செயலர் உரை

(கொழும்பு)

நோர்வே அரசு வஞ்சகத் தனமாக இலங்கையின் இன விவகாரத்தில் தலையிட்டு, தீர்வொன்றைக் கொண்டுவரு வதற்கு மேற்கொண்ட முயற் சிகளை தடுத்து நிறுத்தியவர் கள் நாங்களே,

இவ்வாறுநுகேகொடையில் நடைபெற்ற ஜே வி.பியின் பொதுக்கூட்டத்தில் உரை யாற்றிய, கட்சியின் பிரசார செயலாளரும் எம்.பி யுமான விமல்வீரவன்ச தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்; பொதுஜன ஐக் கியமுன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் கள் அனைவரும் கள்ளர்கள், இந்த அமைச்சரவையில் எந்த ஒரு உறுப்பினருமே நேர்மை யானவர்கள்என்று எங்களால் சொல்லமுடியாது.

பொது ஜன ஐக்கிய முன் னணி அரசுடன் நாம் செய்து

[10ம் பக்கம் பார்க்க]

# பிரதிநிதியைத் தெரிவதில் மலையகத்திலும் இழுபறி

(கொழும்பு)

அரசியல் நிர்ணய சபைக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப் பினர்கள் ஒன்று சேர்ந்து ஒய்வுபெற்ற நீதியரசர் ஜமீலை முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக தெரிவு செய் துள்ளனர்.

மலையக மக்கள் சார்பில் மலையக மக்கள் முன்னணி யும், இலங்கைத் தொழிலா ளர் காங்கிரசும் இணைந்து தெரிவு செய்த ராதாகிருஷ் ணனுக்குப் போட்டியாக இ. தொ. காங்கிரசில் இருந்து வெளியேறிய மாற்று அணியி னர் பெரி சுந்தரத்தை நிய மிக்க நடவடிக்கை எடுத்த தினையடுத்து மலையகமக்கள் சார்பில் நியமிக்கப்படவிருக் கும் பிரதிநிதியிலும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக அறி விக்கப்படுகிறது. [வ]

# சேக்கிழார் அடிப்பொடி இன்று வருவார்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் இன்று வழங்கப் படவுள்ள இலக்கிய கலாநிதி பட்டத்தினைப் பெறுவதற்கு தமிழகத்தில் இருந்து சேக்கி

(10ஆம் பக்கம் பார்க்க

# கோப்பாய் மாணவனை விடுவிக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் பொலிசாரால் கடந்த மாதம் 18ம் திகதி கைதுசெய்யப்பட்ட கோப் பாய் கிறிஸ்தவக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் சாந்திராஜ்டிரோசனை எதிர் வரும் 9ந் திகதிக்குள் விடுத லை செய்யவேண்டும் அல்லது நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டும் இல்லையேல் 10ந் திகதிமுதல் குடாநாடுதழுவிய பாடசாலை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக கல்லூரிமாணவர் களால் தெரிவிக்கப்பட்டுள் ளது

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றும் பிரஸ்தாப மாண வன் கைது செய்யப்பட்டி ருப்பதால் அவரது கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கைது செய்து நீண்ட நாட்க ளாகவிடுதலை செய்யாமலும்

(10ம் பக்கம் பார்க்க)

# கனடாவில் இடம்பெறும் ஈழத்தமிழ் இளைஞர்களின் மோதலை தடுக்க முயற்சி

(ரொரன்ரோ)

கடந்த பல வருடங்களாக கனடாவிலுள்ள சில இலங் கைத்தமிழ் இளைஞர்களுக் கிடையே இடம்பெற்று வரும் கோஷ்டி மோதல்கள், துப் பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் கடந்த மாதம்முதல் படு கொலைச் சம்பவங்களாக மாறிவருவதையடுத்து அவற் றினை கட்டுப்படுத்துவதற்கு கனடாவிலுள்ள தமிழர் அமைப்புக்கள் தீவிர அக்கறை

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முறைசாராக்கல்விப் பிரிவினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இலவசக் கணனிப் பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் எதிர்வரும்திங்கட்கிழமை பி. ப 3.00மணிக்கு நடைபெறவுள்ளன.

அன்றே பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் விண்ணப்பித்த அனைவரையும் சமுகம் கொடுக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற 57 பேர் கைது

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டிப்பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெற்று வந்த 57 பேர் அப்பகுதிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மின்சாரத்தைப் பெற்று வந்த நிறுவனங்களில் அரசவங்கி ஒன்று அடங்கு மென்றும் இதன் மூலம் மின்சாரசபைக்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மின்சாரசபை விசாரணை முகாமையாளர் றூபன் விக்கிரம ஆராய்ச்சி தெரிவித்தார்.

கட்டடம் ஒன்றின் உரிமையாளர் ஒருவரே இவ்வாறு சட்ட விரோதமாக மின்சார இணைப்பைப் பெற்றுக் கொடுத்தாரென்றும் இக்கட்டடத்திலிருந்து 40 மின்மானிகள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## பெண்ணிடம் நகை திருட்டு

(மந்திகை)

வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்த உற்சவத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணின் தங்க நகைகளை, மோட்டார் சைக்கிளில் வழிமறித்த திருட்டு ஆசாமிகள் சிலர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று வல்லிபுரக்குறிச்சியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் பெண்ணின் சங்கிலி, அட்டியல் என்பனவற்றை மேற்படி திருடர் பறித்துச் சென்றுள்ளனர். (உ-23)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(வல்வெட்டித்துறை)

கோப்பாய், வானவில்விளையாட்டுக்கழகம் தயாநகைப் பூங்கா ஆதரவில் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை காலை 8.30 மணிக்கு யாழ் கோப்பாய் மகாவித்தியாலயத்தில்,

ராஜாவி.க.எதிர் வை எம் எச்-ஏ (சிவப்பு) வி.க.வும் பி.ப 2.30 மணிக்கு அரியாலை ஐக்கியம் (B) வி.க. எதிர் நொதேன் (பச்சை) வி.க. வும் மோதவுள்ளன.


வானொலி தொலைக்காட்சி
கலைஞர்களின்
**சோக்கெல்லோ சண்முகம்**
குழுவினர் வழங்கும்
**வில்லடிப் பாட்டு**

தெல்லிப்பழை துர்க்காபுரம் ஸ்ரீதுர்க்கை அம்பாள் தேவஸ்தான அறங்காவலர் சபையினரின் அனுசரணையுடன் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் மேடையேறும் வில்லிசை நிகழ்ச்சி நவராத்திரி தினத்தையொட்டி 17-10-2001 இலிருந்து 26-10-2001 வரை நிகழ்ச்சிகளை நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**பெ. உமாமகேஸ்வரி**
சிவப்பிரகாசபுரம்
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

கொழும்பில்
**தா. சண்முகநாதன்**
தொலைபேசி: 074-815009
[3807]


## கூடைப் பந்தாட்டம்

(வல்வெட்டித்துறை)

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்க ஆதரவில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வரும் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளைய தினம்,

பி.ப 4 மணிக்கு யா/ திருக்குடும்பக்கன்னியர் மடம் எதிர் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும்,

பி. ப. 4. 45 மணிக்கு யா/ பரியோவான் கல்லூரி எதிர் யா/ இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன. (உ-217)


**ஆசிரியர் தினம் 6.10.2001**

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு
தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள
**வாழ்த்துச் செய்தி**

தமிழ்மக்களின் கல்விச்செல்வத்தை பேணிக் காத்து அதற்கு உரம் ஊட்டும் தியாக சீலர்களாகிய ஆசிரிய பெருந்தகைகளின் பணிகளை நன்றியுடன் நினைவு கூரும் இந்த நன்நாளில் அவர்தம் பணிகள் மேன்மேலும் சிறப்புற்று தமிழ் மாணவர்களின் எதிர் காலத்திற்கு உரம் ஊட்டுவதாக அமைய எமது நல் வாழ்த்துக்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி
யாழ். மாவட்டச் செயலகம்

சி-2681)



யாழ். மாவட்ட மக்களுக்கு
இலங்கை
வங்கியின்
இனிய செய்தி

# தங்க நகை அடகு கடன் சேவை

★ பருத்தித்துறை கிளையில் :
ஆரம்பம் : 08 - 10 - 2001 திங்கட்கிழமை மு.ப. 9.30 மணியளவில்

★ சுன்னாகம் கிளையில் :
ஆரம்பம் : 10 - 10 - 2001 புதன்கிழமை மு.ப. 9.00 மணியளவில்

★ மானிப்பாய் கிளையில் :
ஆரம்பம் : 10 - 10 - 2001 புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில்

இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்
**திருமதி க. துரைராஜா அவர்களால்**
**திறந்து வைக்கப்படும்**
வாரத்தில் 5 நாட்கள் மு. ப. 9.00 மணி முதல் பி.ப. 1.30 மணி வரை
உங்களுக்காகத் திறந்திருக்கும்

# இலங்கை வங்கி

உங்கள் தேவைகளைச் சந்திக்கும்

பிரதேச முகாமையாளர்
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

(C-2680)

# கௌரவ விஞ்ஞான கலாநிதி பட்டம் பெறும் பேராசிரியர் கந்தையா குணரத்தினம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இன்று இடம் பெறும் பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் கந்தையா குணரத்தினம் அவர்களுக்கு கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம் வழங்கப்படுகிறது.

இதற்காகப் பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்கள் பல்கலைக் கழக வேந்தருக்கு சமர்ப்பித்த அறிமுகம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

(ஆ-ர்)

பேராசிரியர்
இ. குமாரவடிவேல்
( விஞ்ஞானப் பீடாதிபதி யாழ். பல்கலைக் கழகம் )

## வேந்தர் அவர்களே !

இப்பல்கலைக் கழக முன்னோடிகளில் ஒருவரும் தலைசிறந்த பௌதிகவியலாளரும் சர்வதேச தராதரமிக்க ஆற்றல் மிக்க ஆய்வாளரும் திறமை மிக்க கல்வி நிர்வாகியும ஆகிய பேராசிரியர் கந்தையா குணரத்தினத்தைக் கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டம் வழங்குவதற்காகத் தங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1934 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் யாழ்ப்பாணம் ஏழாலையில் பிறந்த பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தமது பாடசாலைக் கல்வியைத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிற் பெற்றார். அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வந்த உயர்தரப் பாடசாலைச் சான்றிதழ் (HSC) தேர்வில் 1953 ஆம் ஆண்டில் அகில இலங்கையிலும் முதற்பிரிவிற் சித்தியெய்திய இருமாணவர்களில் ஒருவராகித் தனது பாடசாலைக்குக் கௌரவத்தைத் தேடிக் கொடுத்த பெருந்திறமை பெற்ற மாணவனாக விளங்கினார்.

1954 இல் கொழும்பு இலங்கைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட பேராசிரியர் குணரத்தினம் அவர்களுக்கு மூன்று வருடத்தில் கணிதத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்றுத்தேறும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதாயினும் அவர் பௌதிகவியலைச் சிறப்புப் பாடமாகக் கற்பதை விரும்பித் தேர்ந்து 1958 ஆம் ஆண்டில் பௌதிகவியலில் முதற் பிரிவில் தேறியதுடன் பௌதிகவியலுக்கான கலாநிதி கேவாவிதாரண நினைவுப் பரிசையும் தனதாக்கிக் கொண்டார். 1958 ஆம் ஆண்டிலேயே கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு அமரர் பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனத்தின் வழிகாட்டலின் கீழ் பணியாற்றினார்.

1960 ஆம் ஆண்டில் இலண்டன் இம்பீரியல் கல்லூரிக்குச் சென்ற பேராசிரியர் குணரத்தினம்அங்குபுவிபௌதிகவியற்றுறையில் பேராசிரியர்கள ஜே எம். புறக்ஷோ, ஆர் ஜி.

வியில் பேராசிரியரிலைவன். பேராசிரியர் குணரத்தினத்தை "உண்மையிலேயே பெரும் திறமை மிக்க இலங்கையர் (really brllant Ceylonese" எனக்குறிப்பிட்டு புகழாரம் சூட்டினார் பேராசிரியர் குணரத்தினத்தின் பல ஆய்வுக் கட்டுரைகள் சர்வதேச விஞ்ஞான சஞ்சிகைகளில் வெளியாகின. அவரது கட்டுரைகளில்ஒன்று மிகநீண்டகாலமாகப் பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு நிறுவனங்களிலும் புறக்ஷோ-குணரத்தினம் குணவியல்பு வளையிகள் என்றுபெயரில் ஒரு நியம உசாவுக் கட்டுரையாக உபயோகத்திலிருந்தது.

1963 ஆம் ஆண்டில் இலங்கை திரும்பியபேராசிரியர் குணரத்தினம் பேராதனையிலமைந்தஇலங்கைப்பல்கலைக் கழகத்தின் இரண்டாவது விஞ்ஞான பீடத்தில் பணிபுரியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அங்கு அவர் அமரர் பேராசிரியர் வே. அப்பாபிள்ளையின் கீழ் ஐந்தரை ஆண்டுகள் பணியாற்றினார். 1969ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மீண்டும் கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து அங்கு 1975 மார்ச் வரை பணியாற்றினார்.

1975 ஏப்ரலில் புதிதாக அமைக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளா

மாக அபிவிருத்தியடைந்தது.

கணனிகளின்உபயோகம்பற்றி நன்குபயிற்சிபெற்றிருந்த பேராசிரியர் குணரத்தினம் இப்பல்கலைக் கழகத்தில்கணனித்துறையை விருத்தி செய்யப் பெரும் அக்கறை செலுத்தினார் பல்கலைக்கழகத்தின் கணனி அலகு பேராசிரியர் குணரத்தினம் விஞ்ஞான பீடாதிபதியாக இருந்த போது 1985 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது கணனி விஞ்ஞானம் இப்பல்கலைக் கழகத்தில் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட பேராசிரியர் குணரத்தினம் எடுத்த சளைக்காத முயற்சிகள் 1991 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் கைகூடியது அவர் கணனி விஞ்ஞானத்துறையின் முதற் தலைவராக நியமிக்கப்பட்டு ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் அப்பதவியை வகித்து அதன் அபிவிருத்திக்கு வேண்டிய பலமான அத்திவாரத்தையிட்டார்.

பேராசிரியர் குணரத்தினம் ஆய்வுத் திறமைகள் தேசிய ரீதியிலும் சர்வதேசரீதியிலும் அங்கீகாரம் பெற்றன. அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தின் (IFS) கல்விச் சபையின் ஒரு அங்கத்தவராக 1987இல் நியமிக்கப்பட்டார். 1986 இல் இத்தாலியில் இயங்கும் தத்துவப் பௌதிகவியலுக்கான பன்னாட்டு மையம் பேராசிரியர் குணரத்தினத்தைஅம்மையத்தின் இணை அங்கத்தவ

யவை ஒவ்வொன்றிலும் மும்மூன்று மாதங்களும் வருகை சகபுலமையாளனாக அல்லது வருகைப் பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார். பல வட இந்திய பல்கலைக்கழகங்களிற்கும் ஒரு சிலஐக்கிய அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கும் குறுகியகாலக்கல்விப் பயணங்கள மேற்கொண்டுள்ளார். இத்தாலி, பாகிஸ்தான். யூகோஸிலாவியா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் பங்குபற்றியுள்ளார். மாக்குவிஸ் உலகில் யார் இன்னார் விஞ்ஞானத்திலும் பொறியியலிலும் யார் இன்னார் போன்றபல பிரபல்யமான பன்னாட்டு வாழ்க்கை வரலாற்று வெளியீடுகளிலும்இவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியராக ஆய்வாளராக, நிருவாகியாக மட்டுமன்றி பேராசிரியர் குணரத்தினம்இப்பல்கலைக்கழகத்தின் ஆரம்ப காலத்திலிருந்து அதன் வளாக சபை, பேரவை மூதவை ஆகியவற்றின் செல்வாக்கு மிக்க அங்கத்தவராகவும் அதன் பல நிலையான குழுக்களின் அங்கத்தவராகவும்பல ஆண்டுகள் பணியாற்றி அதன் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். அவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையான குழுக்கள்சிலவற்றிலும் வேறு பல தேசிய மட்டக் குழுக்களிலும் அங்கத்தவராகப் பணியாற்றியுள்ளார்.

பேராசிரியர் குணரத்தினம் இப்பல்கலைக்கழக வரலாற்றில் மிகவும் இக்கட்டானதும் மிகவும் குழப்பம் நிறைந்ததுமானதொரு காலகட்டத்தில் 1994 ஏப்ரல் முதலாம் நாள் முதல் 1996 யூன் முப்பதாம் நாள் வரை இப்பல்கலைக்கழகத்தின்துணைவேந்தராகப் பணியாற்றியுள்ளார். 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் யாழ்ப்பாண மக்கள் குடாநாட்டை விட்டு இடம்பெயர வேண்டியேற்பட்டபோது பல்கலைக்கழக சமூகத்தின் தேவைகளையும் நலன்களையும் பேணுதற்கு விரைந்து செயற்பட்டார். அவர் இப்பல்கலைக்கழகம் சாவகச்சேரியில் அமைக்கப்பட்டவொரு அலுவலகத்துடன்கிளிநொச்

வெவ்வேறு பல்கலைக்கழகங்களில் நாற்பத்தியிரண்டு வருடங்கள் மெச்சத்தகுபணியாற்றியபின், பல்கலைக்கழக சேவையிலிருந்து 2000 ஏப்ரலில் ஓய்வுபெற்றார். அவர்எது செய்யினும் எது நேர்மையானதாகவும் ஒழுங்குமுறையானதாகவும் இருக்கும் பேராசியர் அவர்கள் அவரது மாணவர்களால் அனுபவமும் அர்ப்பணிப்பும் மிககவொரு ஆசிரியராகப் போற்றப்படுகிறார். அவரது மாணவர்களிற் பலர் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு நிறுவனங்களிலும் உயர்பதவிகள் வகிக்கிறார்கள். அவருடன் கூடப் பணியாற்றியவர்கள் அவரை ஒரு நம்பத்தகுந்த நண்பனாகவும் சிறந்தவொரு கல்வி நிருவாகியாகவும் மரியாதை செலுத்துகிறார்கள் அவர்ஒரு உயர்தர விஞ்ஞானி இளைப்பாறுதலின் பின் பேராசிரியர் குணரத்தினம் அவர்களை ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றும் அடிப்படையில் தொடர்ந்து பௌதிகவியற்றுறைக்கும் பல்கலைக்கழகத்திற்கும் சேவையாற்றுமாறு இப்பல்கலைக்கழகம் அழைப்பு விடுத்தது. வேறுபல நிறுவனங்கள் கவர்ச்சியான கொடுப்பனவுகளுடன் வழங்க முன்வந்த நியமனங்களை நிராகரித்துவிட்டு இப்பல்கலைக்கழகத்தின் அழைப்பைப் பெருமனதுடன் ஏற்று இப்போதும்இப்பல்கலைக்கழகத்திற்குத் தமது சேவைகளை செய்து வருகிறார்.

## வேந்தர் அவர்களே!

பேராசிரியர் கந்தையா குணரத்தினம் உயர் கல்வி வளர்ச்சிக்கும் ஆய்வுத்துறைக்கும் பல்கலைக்கழக நிர்வாக மேம்பாட்டிற்கும் ஆற்றிய போற்றத்தகு பங்களிப்புகளைப் பாராட்டி அங்கீகரித்து சமுகமளிக்காத நிலையில் கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டத்தை அளிப்பதற்கு அவரைத் தங்களுக்கு அறிமுகம் செய்துள்ளேன்.

## வட்டுக்கோட்டை சுற்றி வளைப்பு

(அராலி)

கடந்த புதனன்று அதிகாலை, சித்தன் கேணியில் இருந்து மாவடிச்சந்தி வரையிலான வட்டுக்கோட்டைப் பகுதிகள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டன.

இப்பகுதி வீடுகளுக்குச் சென்ற படையினர், வீட்டிலுள்ளோரை மாவடி முகாமுக்கு அழைத்துச் சென்று

[illegible] சென்ற பேராசிரியர் குணரத்தினம்அங்குபுவிபௌதிகவியற்றுறையில் பேராசிரியர்கள ஜே எம். புறக்ஷோ, ஆர் ஜி. மேசன் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்கீழ் தமது பட்டப் பின்படிப்பு ஆய்வுகளில் ஈடுபட்டார். 1963 ஆமஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் இம்பீரியல் கல்லூரியில் DIC பட்டத்தையும் பெற்றார். புவியீர்ப்பு மற்றும் காந்தப் புலங்களது சீரிலிகளை விளக்குவதற்கு இலத்திரனியற் கணனிகளின் பிரயோகங்கள் பற்றியதும் மிகவும்சிறந்ததெனப் பாராட்டப்பட்டதுமான அவரது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரை வேறு பல ஆய்வாளர்களின் ஆய்வுக்கான அடித்தளமாக அமைந்தது. அவரால் வடிவமைக்கப்பட்ட கணனி முறைநுட்பங்களும் படிமுறைகளும் கேம்பிறிடச் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த F J. வைன் (இப்போ FRS) என்பவரால் இக்காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கும் சமுத்திரத் தரைகளின் பரவலும் கண்டங்களின் நகர்வும் பற்றிய ஆய்வுகளில் பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டன 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இங்கிலாந்தில் வெளிவரும் மான்செஸ்ரர் கார்டியன் என்ற பத்திரிகையின் விஞ்ஞானப் பகுதி ஆசிரியருக்கு வழங்கியதொரு செவ்வில்

1975 ஏப்ரலில் புதிதாக அமைக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக யாழ்வளாகத்து பௌதிகவியற்றுறையின்முதற் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் நியமிக்கப் பட்ட பேராசிரியர் குணரத்தினத்திடம் பௌதிகவியற்றுறையை ஒழுங்குபடுத்தி அபிவிருத்தி செய்யும் பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது குறைந்தளவு வளங்களுடன் ஆரம்பித்துஇத் துறையைஇன்றைய நிலைக்கு விருத்தி செய்தபெருமை அவருச்குரியது தற்போதுபௌதிகவியற்றுறையானது எமது பல்கலைக்கழகத்தில்அதிகளவு ஆசிரியர்களைக் கொண்ட துறைகளில் ஒன்றாக விளங்குகிறது இத்துறையில் பயின்ற சிறப்புப் பட்டதாரி மாணவர்கள் பலர் வெளிநாடுகளில் பட்டப்பின் படிப்புகளில் தமது திறமையை நிலைநாட்டியுளளனர்.

பேராசிரியர் குணரத்தினம் 1977 ஜனவரி முதல்1978மே வரையிலும்1983 டிசம்பர் முதல் 1984 பெப்ரவரி வரையிலும் 1984 ஒக்டோபர்முதல் 1988மார்ச்வரையிலும்விஞ்ஞானபீடாதிபதியாகப் பணியாற்றினார். அவரது பதவிக் காலங்களில் அனுகூலமற்ற சூழ்நிலை நிலவிய போதிலும் அவரது வழிநடத்துதலின் கீழ் விஞ்ஞான பீடம் வேகவப் பௌதிகவியலுக்கான பன்னாட்டு மையம் பேராசிரியர் குணரத்தினத்தைஅம்மையத்தின் இணை அங்கத்தவராக நியமித்தது (இலண்டன்) பௌதிகவியல் நிறுவனத்தின் ஒரு சமபங்காளியாகவும் (இலண்டன்) அரச விண்ணியற் கழகத்தின் ஒரு சமபங்காளியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்: தமது துறையில் மிகவுயர்ந்த சாதனைகளைப் புரிந்த விஞ்ஞானிகளும் தமது உத்தியோகத்தில் முக்கிய பங்களிப்புச்செய்தவர்களுமே (இலண்டன்) பௌதிகவியல் நிறுவனத்தின் சமபங்காளியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஆய்வு கற்பித்தல் அல்லது மாநாட்டுச் செயற்பாடுகளுக்காக பேராசிரியர் குணரத்தினம் உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களிற்கு தோழமைப் பரிசில்கள் நியமனங்கள் அல்லது பிரயாணக் கொடைகள் மூலமாகச் சென்றுள்ளார் இத்தாலியில் இயங்கும் தத்துவப் பௌதிகவியலுக்கான பன்னாட்டு மையத்தில் ஒன்றரை வருடகாலமும் ஐக்கிய இராச்சியத்தின் டறம் பல்கலைக்கழகம் மலேசியாவின் விஞ்ஞானப் பல்கலைக் கழகம், ஐக்கிய இராச்சியத்தின் எடின்பரோ பல்கலைக் கழகம் ஆகியன ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வருடமும் இலண்டன் எலிசபெத் மகாராணியார் கல்லூரி, கேம்பிரிட்ச் பல்கலைக்கழகம் ஆகி

[illegible] பட்டார். அவர் இப்பல்கலைக் கழகம் சாவகச்சேரியில் அமைக்கப்பட்டவொரு

அலுவலகத்துடன்கிளிநொச்சியில அமைந்திருந்த விவசாய பீடத்தில் தற்காலிகமாக இயங்குவதற்கு ஒழுங்குகள் செய்தார். பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்து கொள்ளவும் பல்கலைக்கழக உத்தியோகத்தர் தமது சம்பளத்தைப்பெற்றுக் கொள்ளவும் மாணவர்கள் தமதுநிதியுதவிக்கொடுப்பனவுகளையும் புலமைப் பரிசிற் கொடுப்பனவுகளையும் ஒவ்வொரு மாதமும் குறித்தநாட்களில் பெற்றுக் கொள்வதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும் மிகக் கடுமையாக உழைத்தார். தமது இறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்றும்தறுவாயிலிருந்தபோதுஏற்பட்டஇடப்பெயர்வால் மனஞ் சோர்ந்திருந்த இறுதிவருட மாணவர்களினது நம்பிக்கை தளர்ந்த மோசமான நிலையைபுரிந்து கொண்ட பேராசிரியர் குணரத்தினம் கலை, விஞ்ஞான மருத்துவ பீடங்களினது இறுதிப் பரீட்சைகளை சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெற ஒழுங்குகள் செய்தார். இது இடம்பெயர்ந்திருந்த போதிலும் மாணவர்கள் தமது பட்டப்படிப்புகளை மிதமிஞ்சிய காலதாமதமின்றி முடித்துக் கொள்ள உதவியது.

பேராசிரியர் குணரத்தினம் அவர்கள் இலங்கையின் மூன்று

[illegible] சென்ற படையினர், வீட்டிலுள்ளோரை மாவடி முகாமுக்கு அழைத்துச் சென்று தீவிர விசாரணையின் பின்னர் விடுவித்தனர். (உ-214)

## சுற்றிவளைப்பு

(நெடுந்தீவு)

காரைதீவின இரண்டாம் மூன்றாம் குறுக்குத்தெரு பகுதிகள் அண்மையில், விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சிலர் காரை தீவு அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டுபின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

[உ-5]

## கசிப்பு ஒழிப்பு பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

'அகவொளி' உளவளத்துணை நிலையம்கசிப்பு ஒழிப்புப் பிரசாரத்தை கிராம ரீதியாக மேற்கொண்டு வருகிறது.

அதன் இயக்குநர் அருட்திரு எஸ்.ஜே இராஜநாயகம் தலைமையிலான குழுவினர் 72 கிராமங்களில் இப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (உ-106)

## முதுதத்துவ மாணிப் பட்டத்தைப் பெறுகின்ற

# மூத்த அருட்கவிஞர் சீ. விநாசித்தம்பி

சைவப்புலவர்
**செ. கந்தசத்தியதாசன்**
B A. (Hons)Dip.in.Edu

அளவெட்டிக்கேபெருமை தேடிக் கொடுத்தவர் அருட்கவி. சீ விநாசித்தம்பி அளவெட்டியில் சீனியருக்கும் அன்னப் பிள்ளைக்கும் மகனாக விநாசித்தம்பி அவதரித்தார். இளவயதில் அளவெட்டி, அருணாசலம் வித்தியாசாலை, அருணோதயாக் கல்லூரிகளில் கற்றுத் தேறி 1945ல் நாவலப்பிட்டி அபராக் கொல்லைப் பாடசாலையில் ஆசிரியரானார். திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட இவர் தந்தைவழி சங்கீதத்திலும் சிறப்புப் பெற்றுச்சங்கீத ஆசிரியத்தராதரப் பத்திரமும் பெற்றார்.

### கவியும், பிரசங்கமும்

தாரமும் குருவும் தலைவிதிப் படி எனும் இவர் தன்னுடைய வளர்ச்சிக்கு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் சி.கதிரவேலு, தத்துவ ஞானி பொ. கைலாசபதிஅதிபர்எஸ்.சுவாமிநாதன் ஆகியோரைக்குருவாக அமைத்துக் கொண்டார். திருமுருககிருபானந்த வாரியார், கவியோகி சுத்தானந்த பாரதியார் பித்துக்குளி முருகதாஸ் ஆகியோர் தெய்வீக கலை வளர்ச்சிக்கும்உதவினார்கள். இதனால்ஆலயங்கள் தோறும் கதாப்பிரசங்கம் செய்யும் பணியில் ஈடுபட்டுசைவத்தை வளர்த்தார். கலை வளர்ச்சியால் கற்பித்தலும்மிகச் சிறப்பாக நடை பெற்று வந்தது.

கொழும்பு வெள்ளவத்தை மாணிக்கவிநாயகர்,நல்லூர்க் கந்தசுவாமி கோயில் எனபதினெட்டுக்கும் மேற்பட்ட ஆலயங்களில் தொடர்கதாப் பிரசங்கங்களை நடத்தி அடியார்களை பத்திவெள்ளத்தில் ஆழ்த்தினார். 'சட்டியில்மாவறுத்தசங்கரன் பிள்ளை' என்ற பாண்மையில் சிலேடையாகப் பேசுவார். தனக்கே உரித்தான தெய்வீகக் குரல்பாணியில் கவிபாடும்வல்லமை கேட்போரை உருக்கி உள்ஒளியை ஏற்படுத்துமாம்.

அளவெட்டியில் இவர் பிரசங்கம் செய்யாத ஆலயங்களே இல்லை. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கொழும்பு, நீர்கொழும்பு, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என இலங்கைத்தீவின் பலபாகங்களிலும் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஆலயங்களில் விழாக்களில் அத்தெய்வங்களுக்கேற்றவகையில் கதாப் பிரசங்கம் செய்த பெருமை இவரையே சாரும். இந்தியாவில் சமயபுரம், திருச்சி, மதுரை, மீனாட்சியம்மன் கோயில் எனப் பல இடங்களிலும் இவரது கதாப்பிரசங்கங்கள் இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### கௌரவப் பட்டங்கள்

அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயாவினது வாழ்க்கையிலே அவர்பெற்ற கௌரவபட்டங்கள் ஏராளம். நல்லூர்க் கந்தன் ஆலயமுன்றில் முருகன் தண்ணீர்ப் பந்தலில் 1963 ஆம் ஆண்டு உற்சவ இறுதிநாளில் நல்லூர் மாப்பாணதாச முதலியார்அருளோடுசேர்ந்த கவித்துவத்தைப் பாராட்டி ''அருட்கவி'' என்னும்பட்டம் சூட்டினார். அதனைத் தொடர்ந்து பிரசங்க பாகவதர், அருட்புலவர், சக்திவாசகர், திருவருட்செல்வர், சைவமணி, சிவக்கவிமணி அருட்கவியரசு, மூதறிஞர், திருவருட்கவிமணி எனப்பல பட்டங்களைச் சைவச் சான்றோர்கள் வழங்கினார்கள்.

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் 1973 ஆம் ஆண்டில் அருள் மொழியரசு என்னும் படடம் சூட்டிக்கௌரவித்துக்கொண்டார். கொழும்பு இந்துக் கலாசாரத் திணைக்களம் சைவநன்மணிஎன்னும்பட்டம் கொடுத்து அருட்கவி ஐயாவைக் கௌரவித்தது. இவ்வாறு பல பட்டங்கள் இருந்தாலும் அருட்கவி என்ற பட்டமே மிளிர்கிறது.

### அருட்கவிப் பாடல்கள்

அருட்கவி என்றபட்டத்திற்கேற்ப பதினைந்தாவது வயதிலே வைரவப் பெருமான் கனவில் தோன்றி தனக்குத் திருவூஞ்சல் பாடும்படி கேட்டாராம். உடனேயே பாடி முடித்து விட்டார்.

22 ஆம் வயதில் நாவலப்பிட்டியில் ஆசிரியராகக் கடமையாற்றிய வேளை முத்துமாரி அம்பிகை கனவில் தோன்றி தன்னைப் பாடும்படிகேட்டு இரு தினங்களில் மாரியம்மை அந்தாதி பாடி முடித்தாராம். இவ்வாறு இவரது வாழ்க்கையில் பெற்ற அருட்சம்பவங்களும் எழுந்த அருட்கவிகளும் ஏராளம். இவ்வகையில் ஆரம்பித்ததே நாகவரத நாராயணர் தேவஸ்தானம் ஆகும் அரவம் தீண்டி இறந்த பாலகனையே உயிரெழுப்பிக் கொடுத்த பெருமை இவரையேசாரும்.

இவரது அருட்கவிப் பணி சொல்லிலடங்கா. நயினை நாகபூசணி அம்பாள் திருப்பள்ளியெழுச்சி முதல் 7 ஆலயங்களுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி திருப்பொன்னூஞ்சல் முதல் 20 க்கு மேற்பட்ட ஆலயங்களுக்கு ஊஞ்சல் பாக்களைப் பாடியுள்ளார். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி பிள்ளைத்தமிழ், காரைநகர் பயிரிக்கூடல் ஸ்ரீ முருகன் பிள்ளைத்தமிழ், அளவெட்டி ஸ்ரீ நாகவரதநாராயணர் பிள்ளைத்தமிழ் எனப் பிள்ளைத் தமிழ் இலக்கியங்களையும் பாடியுள்ளார்.

### நூல்கள்

1964ஆம்ஆண்டிலிருந்துவருடந்தோறும் அருட்கவிஐயாவினது நூல்கள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானமே முப்பத்தாறிற்கும் அதிகமான நூல்களை வெளியிட்டிருக்கின்றது. இலங்கையிலுள்ள நிறுவனங்கள், கோயில்கள் இவரது கவிகளைத் தாங்கிய நூற்றியிருபதிற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கின்றன. இவ்விலக்கியங்களில் மிகச் சிறப்புவாய்ந்தது; செல்வச்சந்நிதிக்கந்தன் தல புராணம்,கந்தபுராணவசன காவியம், தெல்லிப்பழை துர்க்கா தேவி திருவருட்கவிமாலை, துர்க்காதேவி திருவந்தாதி என்பனவாகும். அவ்வப்போது பத்திரிகைகளிலும் மகாகும்பாபிஷேக சிறப்புமலர், ஆண்டு விழா மலர்கள் எனப் பல ஆலயங்களாலும் வித்தியாசாலைகளாலும் வெளியிடப்பட்ட பல மலர்களுக்கு கட்டுரைகள்வழங்கியுள்ளார். பல நூல்களுக்கு ஆசியுரை, அருளுரை, வாழ்த்துரை என்பன வழங்கியுள்ளார்.

### சோதிடம் வல்லவர்

இவர் சோதிடத்துறையிலும் வல்லவராகக் காணப்படுகின்றார். தினமும் ஏராளமானவர்கள் மிகத் தொலைவிலிருந்து வந்து கூட பயனடைகிறார்கள். திருமணப் பொருத்தங்கள் மட்டுமன்றி கிணறு, வீடு கட்டட நிலையம் எடுத்தல் வீடமைப்புஎன மனையடி சாஸ்திரமும் சிறப்பாகப் பார்க்கக் கூடியவர்.

தெய்வீக பக்தி, வாக்கு வசீகரம், புத்தி சாதுரியம், ஆற்றல் என்பன நிரம்பப் பெற்றதால் இவரைப் பல நிறுவனங்கள் தம்மகத்தே இணைத்துக் கொண்டுள்ளன. இவற்றில் ஆத்மஜோதி முத்தையா அவர்களுக்குப் பின் இந்துசமயப் பேரவைத் தலைவர்பதவியை அலங்கரிக்கக் கூடியர் அருட்கவி ஐயா என ஏகமனதாகத் தீர்மானித்து தற்போதுதலைவர் பதவியில் இருக்கின்றார்.

போதனை மட்டுமன்றிச் சாதனையிலும் வல்லவராகத் தனது வாழ்க்கையை தவ வாழ்வாக சிவவாழ்வாக்கி சீவனைச் சிவனாக்கிக்கொண்டிருக்கும் அருட்கவி ஐயா இன்றும் கூட நூல்களையே எழுதிக் கொண்டுள்ளார்.

இத்துணை சிறப்பு வாய்ந்த ஐயாவைக் கௌரவித்துஇலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கலாம் என ஆய்வாளர் கருதினர். இதையுணர்ந்த யாழ் பல்கலைக்கழகம் அருட்கவிஞருக்கு முது தத்துவமாணி (M.Phid) பட்டம் வழங்குகின்றதென்றால் பல்கலைக்கழகமே பெருமை பெறுகின்றது. பல்கலைக்கழக மண் புனிதம் பெறுகின்றது. அவரோடு பட்டம் பெறும்ஏனைய பட்டதாரிகளும் சிறப்புபெறுகின்றனர். இந்நாள் ஒரு பொன்நாளாகும்.

## யாழ். மாநகர சபையின் பொன் விழா

# ஏற்பாடுகள் விரிவான முறையில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் 50 ஆம் ஆண்டுநிறைவுபொன் விழா நிகழ்வுகள் இவ்வருட இறுதியில் இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டினை யாழ். மாநகர சபை துரிதகதியில் மேற் கொண்டு வருகின்றது.

பொன்விழாவினை ஒட்டிப் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளையும் போட்டிகளையும் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1949 ஆம் ஆண்டுஆரம்பிக்கப்பட்ட யாழ். மாநகரசபை இப்போது 52 ஆம் ஆண்டு பூர்த்தியடைந்த நிலையில் உள்ளபோதிலும் 1999 ஆம் ஆண்டு இடம்பெற வேண்டிய பொன்விழா நிகழ்வு நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக கொண்டாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னர் நகரசபையாக இருந்த இச் சபை பின்னர் மாநகரசபையாகதரம்உயர்த்தப்பட்டு இன்று ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இங்கு கடமையாற்றுகின்றனர்.

பொன்விழாவை ஒட்டிய போட்டிகள் யாவும் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வசிப்பவர்களிடையே நடத்தப்படவுள்ளன.

ஊழியர்களைக் கௌரவிப்பது ஊழியர்களின் பிள்ளைகளை கௌரவிப்பது அத்துடன் ஊழியர்கள்மற்றும் அவர்களது பிள்ளைகளிடையே போட்டிகள் நடத்தப்படுவது என்பனவும் அடங்கும்.

இதில் சிறப்பு அம்சமாக 'பொன்விழா' மலர் வெளியிடப்படவுள்ளதுடன் இதற்கென சரித்திர நிகழ்வுகள் நினைவு கூரும் ஆக்கங்களை யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதி மக்களிடம் இருந்து கோரப்படவுள்ளது.

இதனையொட்டி மாநகர சபை அனைத்து உறுப்பினர்கள் ஊழியர்கள் பங்குகொள்ளும் சிரமதானப் பணியும் இடம்பெறுவதுடன், நினைவுக் கல் நாட்டல் மற்றும் உயிரிழந்த மாநகர சபைஊழியர்கள உறுப்பினர்கள் நினைவுப் பரிசில்களும் வழங்க ஏற்பாடாகியுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன (உ-10)

## பண்ணைக் கடற்கரையோரத்தில் பலத்த பாதுகாப்புஏற்பாடு

யாழ். நகரை அண்டிய பண்ணைக் கடற்கரை ஓரங்களில் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

இந்த வகையில் காவலரண்கள் அமைக்கப்படுவதுடன், அப்பகுதியில் நெடுங்காலமாக அகற்றப்படாதிருந்த பற்றைகள் வெட்டப்பட்டு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் முள்வேலிகள் அமைக்கப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. (உ-10)

## இராசி பலன்

6-10 2001
(புரட்டாதி 20, சனி)
சதுர்த்தி மு இ 10.17 வரை
கார்த்திகை பி இ 3.23 வரை
இராகுகாலம் 9 02- 10 32
சுபநேரம் 3 02- 4.32
அமிர்தம், கார்த்திகைவிரதம்
சங்கடகர சதுர்த்தி.

**மேடம்**
உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், திடீர் நன்மை, கீர்த்தி.

**இடபம்**
அமைதிக் குறைவு, முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி, தனவரவு.

**மிதுனம்**
காரிய அலைச்சல், பொருள் விரயம், விரோதம், ரோகம்.

**கடகம்**
எதிர்பாராத நன்மையான சம்பவம், தனலாபம், புகழ், தெய்வ தரிசனம்.

**சிங்கம்**
சுப நிகழ்வு, தொழில் சிறப்பு, காரிய நன்மை, தூர தேச செய்தி.

**கன்னி**
பிரயாணம், புதியதொழில் சிந்தை, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம்.

**துலாம்**
போசன சுகம், காரிய நட்டம், வீண்பிரச்சினை, உடல் சோர்வு.

**விருச்சிகம்**
உறவினர் சந்திப்பு, முயற்சி கைகூடும், மனச்சஞ்சலம், எதிர்பாராத நன்மை.

**தனுசு**
நினைத்தகாரியம்கைகூடும், லட்சுமிகரம், ஆரோக்கியம், குடும்ப சுகம்.

**மகரம்**
வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், உடல் சோர்வு, காரிய தாமதம்.

**கும்பம்**
தன்னம்பிக்கை குறைவு, வீண்பயம், தனவரவு, முயற்சி தாமதம்.

**மீனம்**
அந்நியர் சந்திப்பு, காரிய அனுகூலம், வாக்குமேன்மை, பொருள் சேர்க்கை.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

## கிளைமோர் செயலிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை செல்வநகர்பகுதியில் இராணுவவாகன அணிகளை இலக்குவைத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கிளை மோர்களை படையினர் கண்டெடுத்து அவற்றைசெயலிழக்க வைத்துள்ளனர். (உ-5)

## சுழற்சிமுறை கடன்

(காரைநகர்)

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் அங்கத்தவர்கள் 41 பேருக்கு அண்மையில் யு என். எச்.சி.ஆர் நிறுவனத்தினால் சுழற்சி முறைக் கடன் வழங்கப்பட்டது. (உ-238)

## திருடன் பிடிபட்டான்

(காரைநகர்)

காரைநகர் அழகபுரிவைரவ முருகன் ஆலயத்தில் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு ஊர் காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (உ-238)

# நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் ஆசிரிய சமூகத்தின் உயர்வுக்காக ஒத்துழைப்போம்

★ வ. மாணிக்கம் ★
அதிபர்
யா/கனகரத்தினம் ம. ம. வி.

1966-ம் ஆண்டு ஒக்டோபர்மாதம் 5 ந் திகதி பாரிஸ் மகாநாட்டின் சிபாரிசுகளின் அடிப்படையில் 142 சரத்துக்கள் அடங்கிய பிரகடனம்ஆசிரியர்களின் மேன்மையான பங்களிப்பினையும், அவர்களின் உரிமைகளையும் உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டு 1966-ம் ஆண்டு ஒக்டோபர் 6 ந் திகதி அங்கீகரிக்கப்பட்டது இலங்கையில் சர்வதேச ஆசிரியர்தினமாக ஒக்டோபர் 6 ந் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது.

யுனெஸ்கோ பிரகடனத்தில் ஆசிரியர்பணி சேவையாகவும் தொழிலாகவும் கொண்டாடப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் ஆசிரியபணி ஒரு சமூகப் பணியாகும். மாணவர்களது அகக்கணைத் திறந்து, அறியாமையைப் போக்குபவராக மட்டுமன்றி சிறந்த அறிவு கடவுள் நம்பிக்கை, தெளிவு, கற்பிக்குந்திறன், அவர்களின் பால் பரிவுபோன்ற திறன்கள் நல்லாசிரியர்களின் நற்பண்புகளால் அமைந்துள்ளன. ஆசிரியர்கள் கற்பித்தலை ஒரு புனிதக் கடமையாக ஏற்றுக் கற்பிக்கின்றனர். கல்விப் பணியை கடவுள் பணிஎன்று தன்னல மறுப்போடு சேவையாற்றியதை ஆசிரியர் தினத்தில் நினைவு கூருவது நன்றேயாகும்.

### நல்லாசிரியர்

ஒருநாட்டின் எதிர்காலம் அதன் ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் சிறந்த குணவியல்பு உடையவர்களாகவும் உயர்ந்த எண்ணங்களை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதில் தவறுவராயின் தமது வாழ்க்கைத் தொழிலிலும் கடமையிலும் தவறியவராவர். பிள்ளைகள், ஒழுக்கம், நேர்மை ஆகிய உயர்பாதையில் செல்ல ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடத்தில் மட்டும் வல்லவனாக இருந்தால் போதாது பாடத்தைப் போதிக்கும் முறையிலும் தேர்ந்தவராக இருத்தல் வேண்டும். அத்துடன் தன் மாணவர்களை உயர்நிலைக்கு கொண்டு வருபவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்வி அனைவருக்கும் அகன்று பரவிச்செல்ல ஒளி விளக்காக விளங்குபவர் ஆசிரியர்கள். உலகில் அறிவானது நாளுக்குநாள் வெகுவிரைவில் வளர்ச்சி அடைவதால் புதிய அறிவைப் பெற்றுக் கொள்வது ஆசிரியரது கடமையாகும். இதற்காக, கல்வியூட்டும் ஆசிரியர் ஒவ்வொருவரும் எப்போதும். கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும்.

நிர்வாக அமைப்பிலுள்ள ஒழுங்கீனம், மேலதிகாரிகளின் பக்கச்சார்பான போக்குகள்' சம்பளப் பிரச்சினைகள் எனப் பல பிரச்சினைகளுக்கு ஆசிரியர்கள் முகம் கொடுக்கின்றனர். அத்துடன் வகுப்பறைக் கட்டுப்பாடுகள் சீர்குலைய மாணவர் செய்யும் குழப்பங்கள் வரம்பை மீறிப் போதல், மாணவர்களைக் கட்டுப்படுத்த முற்படும் வேளையில் எதிர்பார்ப்புகள் தோல்வியடைதல் போன்ற சந்தர்ப்பங்களில் மன வேதனையும் மன அழுத்தமும் கொள்கின்றனர்.

கல்வி ஒரு வியாபாரப் பொருளாக இப்போது மாறியுள்ளது இன்றுள்ள நிலையில் ஆசிரியர்களை விலைக்கு வாங்க முடியுமென மாணவர் உலகம் எடைபோடத் தொடங்கியுள்ளது.

### சமூகத்தின் எதிர்காலம்

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'' மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வாக்கியங்களிலிருந்து ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

ஆசிரியர்கள் சமூகமயமாக்கத்தின் முகவர்கள். எதிர்காலச் சந்ததியினரை சிறந்த முறையில் உருவாக்கும் சிற்பிகள். இப்படிச் சிறந்த முறையில் சேவையாற்றி வரும் ஆசிரியர்களைப் பல பாடசாலைக் காரணிகளும் பாதித்து வருகின்றன. இதனால் அவர்கள் மனவேதனை அடைந்து உற்சாகமிழந்து காணப்படுவதனால் கற்பித்தல் மட்டுமன்றி பாடசாலையின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளும் பாதிப்புக்குள்ளாகின்றன.

சுயகௌரவம், தன்னடைவுத் தேவைகள், பணிக்கும் தகமைக்கும் தேர்ச்சிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு, ஆசிரியர் தொழில்பற்றிய தனிப்பட்ட கருத்து, எதிர்பாராத இடமாற்றங்கள், உத்தியோக உயர்வுக்கான வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுதல், பாடசாலை

### உயர்ந்த கௌரவம்

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், உரிமைகளை வென்றெடுக்கவும், தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டியுள்ளது. இருந்தபோதும் நல்லாசிரியர்கள் தம் கடமையில் கண்ணாகவேயிருந்து பணி செய்கின்றார்கள்.

ஆசிரியர்கள் 21ம் நூற்றாண்டின் புதிய உலக ஒழுங்கமைப்புகளுக்கு ஏற்ப தம்மை நவீனப்படுத்திக் கொள்ளவும் மாணவர்களின் தேவையை உணர்ந்து செயலாற்றவும் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அதே வேளை பன்னெடுங்காலமாக ஆசிரியர்களுக்கு இருந்துவரும் உயர்ந்த கௌரவத்தைத் தொடர்ந்து பேணும் வகையில் தமது செயறபாடுகளை ஆசிரியர் தொடர்வது அவசியம். ஒரு நாளை அல்லது ஒரு வாரத்தை மட்டும் நினையாக் கொள்ளாமல் வருடம் முழுவதும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுதல் வேண்டும். □

# ஆசிரியர் தினக் கவிதை மஞ்சரி

## தெய்வம் பணிமின் தெளிந்து

செய்வது யாதென் றுணராச் சிறுவர்க்கும்
உய்யவழி உள்ளத் தமைத்து — மெய்யிது
பொய்யது வென்றுரை செய்உயர் பொன்மனத்
தெய்வம் பணிமின் தெளிந்து.

— சண்

## முழு முதற் கடவுள்

மூன்றாம் இடத்தில் இருந்தாலும் இவர்கள்
முழுமுதற் கடவுளே யாவர்க்கும்
சான்றோர்களை உருவாக்கி உலகில்
சரித்திரப் புகழ் படைக்கவே பிறந்தவர்
ஆன்றோர்கள் தொட்டு அரசர்கள் வரையும்
அறிவுரை சொல்லிக் கொடுத்தவர்கள் இவர்கள்
இதனைச்
சான்று பகரவே இன்று சர்வதேச தினமாய்
சகலோரும் கொண்டாடும் விழாவாம் இது

து. ஜேந்திரன்
யாழ்; பல்கலைக் கழகம்.

## வந்தனங்கள் கோடி

மரியாதைக்கு விசை கொடுத்து
மாநிலத்தோர் போற்றிடவே
நல்லறிவை நன்றாக புகட்டி
நாலுபேர் நடுவே நன்மதிப்பு பெற்றிடவே
புகழாரம் தன்னை நன்றாக சூட்டி
பூமியில் வாழ வந்தனங்கள் கோடி

வட்டூர். குணன்.

## வாழ்த்துகின்றோம்

அறியாமை இருளகற்றும்
ஆசான்கள் திருநாளாம்
அக்டோபர் ஆறதிலே
ஆசான்கள் அனைவரையும்
அன்புடனே வாழ்த்துகிறோம்!

மீசாலையூர் தம்பியண்ணா

## ஆசிரியர்க்(கு) இன்று இங்கு...

அறிவுகள் ஆய்ந்து சொல்வோர்
அன்பினால் அழகராகி
முறிவுகள் நீக்கி எங்கள்
மனதினை மகுடமாக்கி
நெளிவுகள் சுழிவும் கூட
நெருக்கமாய் இருந்து சொல்லி
அழிவினை அழிக்கும் வல்லோர்
ஆசிரியர் கின்று இங்கு
மதிப்புகள் போதா தைய்யா!
மாலையைப் போட்டுமென்ன?
'பதியினைப்' போன்றவர்க்கு
பண்பினால் நன்றி கூறு!
அதிகுதி அடக்கு. அன்பாய்
இருந்திடப் பாரு என்று
பதிக்கிறேன் பேப்பர் மீது
படித்திரு... பண்பு காட்டு!!

ரீ. ரீ மயூரன்

## ஆசிரியர்களுக்கு ஓர் ஆராத்தி

ஆசிரியரே
நீங்கள்
வாழ்க்கைச் சக்கரத்தின்
திசைகாட்டி
சுழலும் உலகின்
அச்சாணி
தேசத்தை சுமப்பிப்பவர்களே
நீங்கள்
தேசியத்தின்
மாமனிதர்

மாணவர் உள்ளங்கள்
உங்கள் விளைநிலம்
மாணவர்க்கோ நீங்கள்
மேய்ச்சல் நிலம்

ஏடு தொடக்கியவரே
எழுதக் கைகொடுத்தவரே
தலைமைச் செயலகத்தின்
தலைவர்களே
நீங்கள்
அறிவியல் மாத்திரைகளை
அள்ளி வழங்கும்
வைத்தியர்கள்;

ஏற்றவாறு வளைந்து
இதமாக அறிவூட்டும்
நீங்கள்
சமுதாயத்தின்
நம்பிக்கை நாணல்கள்

ஏற்றிவிட்டு - ஏணியாய்
ஏணியாய் நிற்பவரே
எட்டி உதைப்பவர்கள் பலர்
அவர்கள்
எட்டியில் காய்த்தவர்கள்
மட்டியியல் மாணிகள்;

சூரிய ஒளியை மதிப்பிட
விளக்கொளிகள் பல
வசந்தகால விருட்சத்தில்
கருகல் தேடி ஒரு ஆய்வு
கடலை அளக்க
கால் லீற்றர் கிண்ணமா?

நீங்கள்
வீசும் காற்று
எறிக்கும் வெய்யில்
பெய்யும் மழை
இதமான குளிர் நிலவு
பிரதி உபகாரம் பாராத
பெருமக்கள்
நீங்கள்
இயற்கை அன்னையின்
பிள்ளைகளே;

- ஐ. சிவராஜா

## போற்றுகின்றோம்

ஏற்றவழி காட்டி
ஏணிப்படி ஏற்றி
மாற்றமதை வாழ்வில்
மலரவைத்த ஆசான்
ஊற்றனவே என்றும்
உள்ளமதில் நிறையப்
போற்றி நாம் நிற்கின்றோம்

மு. நடராசா

# வீட்டின் மேல் பனை வீழ்ந்ததில் குழந்தை காயம்

(மீசாலை)

கடும் காற்றினால், வீட்டின்மேல் பனைமுறிந்து வீழ்ந்ததில் அங்கிருந்த குழந்தை தலையில் காயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சமபவத்தில், மாஹோவில் இருந்து வந்து மேற்படி வீட்டில் தங்கி நின்ற ஹசைன் அஹமது (வயது இரண்டரை) என்ற குழந்தையே காயமடைந்துள்ளது. (உ-229)

## சுகவாழ்வு

ஒழுக்கமான நடத்தையும். கட்டுப்பாடான வாழ்வும் உங்களை எயிட்ஸிலிருந்து என்றும் காக்கும். ஆரோக்கியமாக வாழ வைக்கும.

(எயிட்ஸ் வருமுன் காப்போம்)

தரிசனம்

# இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை.தலைவர் அரசிடம் விளக்கம்

(சென்னை)

2003 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற உள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியை எதிர்த்து விளையாட இந்திய அணியை அனுமதிப்பதா இல்லையா என்பதை இந்திய அரசு விளக்க வேண்டும் எனஇந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தலைவர் ஐக் மோகன் டால்மியா கேட்டுள்ளார்.

எனினும் இது நாட்டின் வெளிவிவகார அமைச்சு சம்பந்தப்பட்டது என்றும் அரசு எடுக்கும் முடிவை கட்டுப்பாட்டுச் சபை பின்பற்றும் என்றும் தெரிவித்துள்ளார்.

உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானும் இந்தியாவும் ஓர் அணியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ 2)

# பொது நலவாய நாடுகளின் மாநாடு அடுத்தவருட ஆரம்பத்தில்

(சிட்னி)

அமெரிக்காமீதான தாக்குதலை அடுத்து ஒத்தி வைக்கப்பட்ட பொதுநலவாயநாடுகளின் மாநாடு எதிர் வரும் மார்ச் மாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

இந்தமாநாடு இம் மாதம் 6ஆம் திகதி தொடக்சம் 9ஆம் திகதி வரை நடைபெற இருந்ததும் இதில் 50 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ள இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இம் மாநாடு பிறிஸ்பேர்ன் நகரில் வரும் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம்திகதி வரை நடைபெறும் என அவுஸ்திரேலியபிரதமர் ஜோர்ன்ஹவாட் தெரிவித்துள்ளார். (உ-2)

# அமெரிக்க வாசிக்கு மிருக நோய்த் தொற்று

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் வைத்திய சாலையில் கால்நடைகளுக்கு ஏற்படும் ''அங்கிராக்ஸ்'' நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சைபெற்று வருவதாக அமெரிக்க சுகாதார செயலாளர் ரொமிக் தொம்சன் தெரிவித்துள்ளார்.

மேற்படி நோயாளி புளோரிடா மாநிலத்தில் உள்ள நீரணை ஒன்றில் நீரருந்தியதால் ''அங்கிராக்ஸ்'' நோய் கிருமி பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்நோய்க்கான வைரஸை பயங்கரவாத உயிரி ஆயுத வைரஸாக பயன்படுத்தப்படலாம் என உலக நாடுகளில் அச்சம் நிலவி வருகிறது. (உ-7)

# பென்டகனை திருத்தியமைக்க 800 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும்

கடந்த மாதம் விமானதாக்குதல் மூலம் சேதமாக்கப்பட்ட அமெரிக்காவின் இராணுவதலைமையகமான பென்டகனை திருத்தியமைக்க 800 மில்லியன் அமெரிக்கடொலர் செலவாகும் என்றும் இக் கட்டிடம் முழுதாக திருத்தியமைக்க மூன்று ஆண்டுகள் ஆகுமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போரின் பின் கட்டப்பட்ட இக் கட்டடம் ஐங்கோண வடிவமானது,

இததாக்குதலில் கட்டடத்தின் ஒரு பகுதியேசேதமாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது இக்கட்டட இடிபாடுகளை அகற்ற 18 மாதங்கள் செல்லும் என மதிப்பிடப்பட்டுளளது. (உ-2)

# விமான விபத்தில்பலியான பத்திரிகையாளர்க்கு 3 லட்சம் நஷ்டஈடு

விமான விபத்தில் கொல்லப்பட்ட நான்கு பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு உதவு தொகையாக தலா மூன்று இலட்சம் ரூபாவினை வழங்குவதற்கு இந்தியமத்திய அரசுதீர்மானித்துள்ளது;

இந்தியாவின் முன்னாள் காங்கிரஸ் அமைச்சரும் கட்சியின் மூத்த உறுப்பினருமான மாதவராவ் சிந்தியா வுடன் மேற்படி பத்திரிகையாளர்கள் விமானத்தில் சென்ற போது ஏற்பட்ட விபத்தில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)


## கண்ணீர் அஞ்சலி

எமது உறவினரும் வட இலங்கை சர்வோதயப் பொறுப்பாளரும் அறங்காவலருமான

### கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

அன்னாரின் பிரிவால் துயருறும்
கா. சுந்தரலிங்கம்
த. தவராசா

64, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்:

(கி-2683)


# பெரும் பலத்துடன் தாக்கும் இலக்குகள் ஆப்கானில் இல்லை

## தாக்குதல் வியூகத்தில் மாற்றமாம்

[வாஷிங்டன்]

ஆப்கானிஸ்தான் மீது பாரிய தாக்குதல் நடத்தக் கூடியவாறுஇலக்குகள்இல்லை என்றும் அதனால் ஆப்கான் மீது ஏவுகணைவீசியும் விமானம் மூலம் குண்டு மழை பொழிந்தும் தாக்கும் திட்டத்தைஅமெரிக்கா மாற்றி விட்டதாகவும் கருத்துக்கள் வெளியாகி உள்ளன;

அமெரிக்கா பாரிய அளவில் தாக்குதல் மூன் நடவடிக்கையைமேற்கொண்டபோதும் இது வரைஎந்தத்தாக்குதலும் நடத்தப்பட வில்லைஎன்பதும் குறிப்பிடத்தக்கது.

இயந்திரத்துப்பாக்கிசளுடன் கூடிய இராணுவவாகனங்கள் ரொக்கட் குண்டுகளை ஏவும் சாதனங்கள் சில டிவிமற்றும் ராடர் கோபுரங்கள் போன்ற சொற்ப அளவு கொண்ட இராணுவம் மட்டுமே தலிபான் வசம் உள்ளதாகவும் பாரியளவில் எந்த இராணுவக் கிடங்குகளும்இல்லையெனவும் சில எரிசக்தி நிரப்பும் முகாம்கள் மட்டும் தான் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாரியளவுதாக்குதலிற்கு அவசியமில்லை என்றும் சிறப்பு படையணியான கடற்படையில் உள்ள பச்சை அதிரடி வீரர்களை கொண்டு இத் தாக்குதல் நடத்தினால் போதும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது: (உ-2)

## உலக தரிசனம்

### தடையில் தளர்வு

(டர்பன்)

கிரிக்கெட் சூதாட்டத்தின் சூத்திரதாரியாகஇனங்காணப்பட்டு கிரிக்கெட் போட்டியில் விளையாட ஆயுட்கால தடை விதிக்கப்பட்ட முன்னாள் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித் தலைவர் ஹன்சி குரொஞ்நே வர்ணனையாளர் என்ற வரையறையினுள் மட்டும் செயற்படலாம் என தென்னாபிரிக்காவின் ஐக்கிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது,

ஆயினும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையோடு எவ்வித தொடர்பையும் குரொஞ்நே வைத்திருக்கக் கூடாதுஎனவும் ஐக்கிய கிரிக்கெட் சபை கூறியுள்ளது; (உ-2)

### கண்டன ஆர்ப்பாட்டம்

(கல்கந்தா)

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்தவுள்ள தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தியாவின் கல்கத்தா நகரில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இவ் ஆர்ப்பாட்டத்தில் இடதுசாரி மாணவ அமைப்புகளும் தொழிற் சங்கங்களும் கலந்து கொண்டன; (உ-7)

# ரஷ்ய பயணிகள் விமானம் வீழ்ந்துநொருங்கியமைக்கு சதிவேலை காரணமா?

(மொஸ்கோ)

ரஷ்ய பயணிகள் விமானம் விபத்துக்குள்ளாகி கருங்கடற் பிரதேசத்தில்வீழ்ந்து நொருங்கியமை தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வெளிவந்துள்ளன.

உக்ரேன் நாட்டு ஏவுகணை ஒன்று இவ் விமானத்தில் தவறுதலாக மோதியதால் விபத்து நிகழ்ந்திருக்கலாம் என அமெரிக்கச் செய்திகள் தெரிவித்த போதிலும் அதனை உக்ரேன் மறுத்துள்ளமை தெரிந்ததே;

இவ்விமானத்தில் பயணம் செய்த 74 பேரில் 60 பேர் இஸ்ரேலியர் என்றவகையில் தாக்குதல் காரர்களின் இலக்கு அவர்களாக இருக்கலாம் எனவும்,

பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ரஷ்யாவை முழுவீச்சில் ஈடுபடவைக்கும் முயற்சியாக இருக்கலாம் எனவும் நோக்கர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்; (உ-2)

# ஒஸாமா பின்லேடன் பாக்.இல் தங்கியுள்ளனார்

(இஸ்லாமாபர்த்)

பாகிஸ்தானில் பெயர் குறிப்பிடப்படாத இரகசிய இடமொன்றில் ஒஸாமாபின்லேடனும் ஜிகாத் தீவிரவாத இயக்கத் தலைவர் ஜமான் ஜவாரியும் 'ஐக்குவைட்' அமைப்பை ஒருங்கிணைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடும்காட்சிகளை கட்டாரின் அல் ஜஷீரா தொலைக் காட்சி ஒளிபரப்பியதாகதெரிய வருகிறது.

இப் பேச்சுவார்த்தையின் போது முகமூடிஅணிந்தநிலையில் கனரக ஆயுதங்களை ஏந்திய தீவிரவாதிகள் சூழ்ந்து நிற்க பின்லேடனும் ஜமான் ஜவாரியும் கைகுலுக்கி சமரசமாகப் பேச்சுக்கள் நடத்தியதை அத் தொலைக்காட்சி ஒளிபரப்புச் செய்துள்ளது. (உ-7)

## புதிய முதல்வர் பதவியேற்பு

(புதுடில்லி)

குஜராத் மாநில பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவராக நரேந்திரா மோரி தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் மோரியை, பதவி விலகும் கேசவாபட்டேல் முன்மொழிந்தார் சந்திர மேதா வழி மொழிந்தார்.

மாநிலக்கட்சித் தலைவரான நரேந்திர மோரி நாளை ஞாயிறு காலை முதல் மந்திரியாகப் பதவி யேற்றுக் கொள்வார், (வ)

## நவம்பர்10-16 ஐ-நா.கூட்டம்

(ரொரன்ரோ)

ஒத்திவைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள்சபையின் பொதுச் சபைக்கூட்டம்நவம்பர்மாதம் 10ம்திகதி முதல் 16ம்திகதி வரை நடைபெறவுள்ளது,

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஸ்ஸின்ஆரம்பஉரையுடன் ஆரம்பமாகும் இக்கூட்டத்தில் 199 அங்கத்துவநாடுகள் பங்குபற்றவுள்ளன.

கடந்தமாதம் 11ம் திகதி அமெரிக்காமீது இடம்பெற்ற பயங்கர வாத தாக்குதலை அடுத்துஇக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதுகுறிப்பிடத்தக்கது; (வ)

# நீதிமன்றிற்கு சமுகம் கொடுக்க ஜெயாவுக்கு இறுதிச் சந்தர்ப்பம்

(சென்னை)

முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவையும் மக்களவை உறுப்பினர் தினகரனையும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி நீதிமன்றில் கட்டாயம் தோன்றும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம்சென்னை செசன் உச்ச நீதிமன்றம்கூடிய போது செல்வி ஜெயலலிதாவும் தினகரனும் நீதிமன்றத்துக்கு சமுகமளிப்பதற்கு இது தான் கடைசிச் சந்தர்ப்பம் என்றுஉச்ச நீதிமன்ற நீதிபதி அசோக்குமார் உத்தரவிட்டார்;

செல்வி ஜெயலலிதாவும் பெரியகுளம் தொகுதி மக்களவை உறுப்பினர் தினகரனும் லண்டனில் இருநட்சத்திர ஹோட்டல்கள வாங்கிய ஊழல் தொடர்பாகத்தொடரப்பட்ட வழக்கில்நேற்றுமுன்தினம் சமுகமளிக்காத காரணத்தினாலேயேநீதிபதி மேற்படிஉத்தரவைப்பிறப்பித்தார்

இருவருக்கும் மூன்று முறை கட்டளைகள் அனுப்பப்பட்டும் அவர்கள் நீதிமன்றில் தோன்றாத படியால் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளில் ஜெயலலிதாவும் தினகரனும் ஈடுபட்டுள்ளதால் நீதிமன்றுக்கு வரமுடியவில்லையென்றுகாரணம் சொல்லப்பட்டபோதும்,

அதையேற்காத நீதிபதி நீதித்துறையினரின் நெருக்கடி காரணமாக வழக்கை விரைவில் விசாரிக்கவேண்டியுள்ளது; என்று தெரிவித்தார்.

இதற்கிடையில் நேரில் கட்டளை கொடுக்குமாறு அதிகாரிக்குப் பணிக்கப்பட்ட போதும் அது நிறைவேறாததால் நீதிமன்றில் இருவரையும் தோன்றும்படி நீதிபதிஉத்தரவிட்டுள்ளார். (து)

### இன்று ஒரு தகவல்

# முட்டாள் யார் என்பது?

வெளியூரிலிருந்ததன்மகளின் வீட்டிற்கு முதன்முறையாக வந்தார். தந்தை. அவரை மகளும், மருமகனும் வரவேற்றனர்: 'உங்களைப் பார்த்துப் பல நாட்கள் ஆகின்றன. இப்பொழுதுதான் எங்கள் வீட்டிற்கு வரும் வழி தெரிந்ததா?' என்று கேட்டாள் மகள். இப்பொழுதாவது வந்தாரே. நல்ல விருந்துக்கு ஏற்பாடுசெய். நானும் உன் அப்பாவும் நம் வயலுக்குச்சென்று வருகிறோம். அப்படியே அவர்நம் ஊரைச்சுற்றிப் பார்த்ததாகவும் ஆகும். என்று சொல்லிவிட்டு அவருடன் புறப்பட்டான் மருமகன்.

வீட்டிற்கு வெளியே வந்த அவன் ஒருகையில் தன் செருப்பைத் தூக்கிக்கொண்டான். மடக்கப்பட்ட குடையை இன்னொரு கையில் பிடித்துக் கொண்டான் மாமனாரோடு பேசிக்கொண்டே நடந்தான். கதிரவனுடைய வெப்பம் அவர்களைத் தாக்கியது. அப்பொழுதும் அவன் குடையை விரிக்கவில்லை. 'வெயில் அதிகமாக இருக்கிறது நாம் அந்தமரத்தின் நிழலில் சிறிது ஓய்வு எடுக்கலாமா? என்றுகேட்டார். அவர் 'ஓய்வு எடுக்கலாம்' என்ற அவன் மரத்தின் நிழலுக்கு அவரை அழைத்துச் சென்றான்.

இருவரும் மரத்தின் நிழலில் அமர்ந்தார்கள். உடனே அவன் மடக்கியிருந்த குடையை விரித்துத் தலைக்குமேலே பிடிக்கத் தொடங்கினான். இதைப்பார்த்து' 'நம் மருமகனுக்கு என்ன? எப்பொழுது குடையை விரிக்க வேண்டுமோ அப்பொழுது மடக்கிவைக்கிறான் எப்பொழுது மடக்கவேண்டுமோ அப்பொழுது விரித்து வைக்கிறான்' என்று நினைத்தார் ஓய்வு எடுத்தபிறகு மீண்டும் இருவரும் புறப்பட்டார்கள். குடையை மடக்கிக் கொண்டு கையில் தூக்கிய செருப்புடன் நடந்தான் அவன்

வழியில் அவர்கள் ஒரு ஆற்றைக்கடக்க வேண்டிவந்தது. ஆற்றில் இறங்கும் முன் தன் கையிலிருந்த செருப்பைக் கால்களில் மாட்டிக் கொண்டான். அவன் ஆற்றைக் கடந்த பிறகு மீண்டும் செருப்பைக் கைகளில் எடுத்துக் கொண்டான். இதைப் பார்த்த அவர் திகைத்தார். எல்லோரும் நடக்கும்போது செருப்புப் போட்டுக்கொண்டு நடப்பார்கள். ஆற்றைக்கடக்கும் போது அதைக் கைகளில் எடுத்துக்கொள்வார்கள். இவனோ உலக வழக்கத்திற்கு மாறாகச் செய்கிறானே என்று நினைத்தார். அதன் பிறகு மருமகனிடம் ஏதும் பேசாமல் நடந்தார்.

ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு இருவரும் வீட்டை அடைந்தனர். தன் மகளைத் தனியாக அழைத்து நடந்ததை எல்லாம் சொன்னார். 'உன் கணவனுக்குப் பைத்தியமா என்ன? என்னிடம் சொல்லக் கூடாதா?' என்று கேட்டார். அப்பா! 'என் கணவரைப் போன்ற சிறந்த அறிவாளி யாருமே இருக்க முடியாது. அவர் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் காரணம் உண்டு' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். அவள். வியப்படைந்த அவர் பைத்தியக் காரச் செயலுக்கும் காரணம் உண்டா? என்று கேட்டார்.

'அப்பா! தரையில் நடந்து செல்லும்போது அவர் செருப்பு அணிவதில்லை தரையில் என்ன இருக்கிறது. என்று அவருக்குத் தெரியும். ஆனால் ஆற்றின் தரையில் என்ன இருக்கிறது என்று பார்க்க முடியாது கூர்மையான முட்கள, கற்கள்கிடந்து காலைக் குத்தினாலும் குத்தலாம். அதனால் ஆற்றைக் கடக்கும்போது செருப்பை அணிந்து கொள்கிறார். அதே போலத்தான் மரத்தின் நிழலினில் அமரும்போது குடையை விரித்துக் கொண்டு அமர்கிறார். ஏனென்றால் மரத்திலிருந்து குச்சிகளோ, பறவைகளின் எச்சங்களோ மேலே விழலாம், திறந்த வெளியில் செல்லும் போது, மேலே ஏதும் விழ வாய்ப்பில்லை. அப்படி ஏதேனும் விழுந்தாலும் கண்ணுக்குத் தெரியும். அதனால் அப்பொழுது அவர் குடையை விரிபபதில்லை. என்று விளக்கினாள் அவள். உன் கணவர் அறிவுக்கூர்மை உடையவர் தான். நான் தான் அவரைப் பற்றித் தவறாக நினைத்து விட்டேன்.

பேராசிரியர் எ. சோதி

### 20- வது பட்டமளிப்பு விழா இன்று

# யாழ். பல்கலைக்கழகத்தில்;

# 1528 பேருக்கு பட்டமளிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இருபதாவதுபட்டமளிப்பு விழா இன்று மிகவும் கோலாகலமாக கைலாசபதி கலை அரங்கில், பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

ஐந்து அமர்வுகளாக நடைபெறவுள்ள இப்பட்டமளிப்பு விழாவின் போது மொத்தமாக ஆயிரத்து 528 பேர் பட்டம் பெறவுள்ளனர். முதலாவது அமாவில் 245 பேரும், இரண்டாவது அமர்வில் 223 பேரும், மூன்றாவது அமர்வில் 103 பேரும், நான்காவது அமர்வில் 268 பேரும் ஐந்தாவது அமர்வில் 689 பேரும்பட்டம் பெறவுள்ளனர். விபரம் வருமாறு,

கௌரவப்பட்டம் 4, கலாநிதி4, முதுதத்துவமாணி11, பட்டப்பின் டிப்ளோமா (கல்வி) 105, பட்டப்பின் டிப்ளோமா (பொது நிர்வாகம்)19, இளங்கலைமாணி 383, இளம் நுண்கலைமாணி (சங்கீதம்) 9, இளம் நுண்கலைமாணி (நடனம்) 5, இளம் முகாமைத்துவமாணி 100, இளம் வர்த்தகமாணி 156, இளம் மருத்துவமாணி 63.

இளம்விஞ்ஞானமாணி (விவசாயம்) 11, இளம் விஞ்ஞானமாணி 146, இளம் சித்த மருத்துவமாணி 12, விஞ்ஞான டிப்ளோமா 2 சங்கீதம் (டிப்ளோமா) 30, நடனம் (டிப்ளோமா)19, உடற்கல்வி (டிப்ளோமா (51,) மீன்பிடி (டிப்ளோமா) 41,

**வெளிவாரி**

இளம் கலைமாணி 310, இளம் நுண்கலை மாணி சங்கீதம் 7, இளம் நுண்கலை மாணி (நடனம்) 6. இளம் வர்த்தகமாணி 34,

மயில்வாகனம்இரகுநாதன், திருநாவுக்கரசு கமலநாதன், தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம், சந்திரசேகரம் பிள்ளைபாலகுமார் ஆகியோர் கலாநிதிப் பட்டமும்,

கந்தையா ஸ்ரீகணேஷன், செல்வி மனோன்மணி கந்தையா, திருநாவுக்கரசு வேல்நம்பி. திருமதி ஜெயலஷ்சுமி இராஜநாயகம், செல்வி ஜெபராணி நாகலிங்கம், ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சின்னத்தமபி பத்மலிங்கம், செல்வி ஜெயரஞ்சனி இராஜதுரை, இரட்ணம் இரவீந்திரநாதன், நடராஜா சுந்தரமூர்த்தி, செல்வி ரதிதேவி மார்க்கண்டு ஆகியோர் முதுமெய்யியல்மாணிப் பட்டமும் பெறவுள்ளனர்.

பண்டிதர் க.சச்சிதானந்தனுக்கு கௌரவ கலாநிதிப் பட்டமும் அருட்கவி சி.விநாசித்தம்பிக்கு முதுகலைமாணிப்பட்டமும் தமிழ் நாட்டைச் சேர்ந்த சேக்கிழார் அடிப்பொடி ரீ.என் இராமச்சந்திரனுக்கு இலக்கிய கலாநிதிப்பட்டமும் பேராசிரியர் க.குணரத்தினத்துக்கு விஞ்ஞானக் கலாநிதிப பட்டமும வழங்கப்படவுளளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்துஇம் மாதம் 8ஆம் திகதி சிமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரையை பேராசிரியர் சபா. ஜெயராஜாவும், 9ஆம்திகதி சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையை சேக்கிழார் அடிப் பொடி. ரீ. என் இராமச்சந்திரனும் ,10ஆம் திகதி பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நினைவுப் பேருரையை பேராசிரியர். எஸ் பாலச்சந்திரனும் நிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை, டொமினிக் ஜீவாவுக்கு கௌரவ முதுகலைமாணிப் பட்டம் வழங்குவது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும, அவர் அதனை ஏற்க மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ 77,217 223)

## மயானம் செல்வதில் சிரமம்

(புத்தூர்)

அச்சுவேலி தெற்குப் பகுதியில் அமைந்துள்ள முளக்கன் மயானத்திற்குச் செல்லும் வீதி திருத்தம்செய்யப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால மரணக்கிரியைகளை ஆற்றுவதற்கு அங்கு செல்வதில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

[உ-235]

## ஆய்வு கூட வசதிகள் இல்லை

(செம்பியன்பற்று)

மணற்காடு றோ.க.த.க. பாடசாலை விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது.

இதனால், விஞ்ஞான உபகரணங்களைப் பேணுவதில் சிரமங்கள் ஏற்படுவதாகவும், க.பொ த. (உ/த) மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டு வருவதாகவும் பாடசாலை நிர்வாகம் கவலை வெளியிட்டுள்ளது.

(உ-42)

## புனரமைப்பு விரைவில் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பேருந்து நிலையத் தரிப்பிடம் புனரமைக்கப்பட்டுப் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

இப்புனரமைப்புப் பணிகள் காரணமாகத் தற்காலிகத் தரிடபிடம் யாழ். சத்திரச் சந்திக்கருகாமையில் மாற்றப்பட்டதும், இதனால் பயணிகள் பெரும் சிரமமடைவதால் இப்பணிகளைத் துரிதப்படுத்துமாறு வட-கிழக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சு பணித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-124)

### வறிய பிள்ளைகளின்

## வாழ்வுயர இந்துப்பேரவை இல்லம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தாய் அல்லது தந்தையை இழந்த, அல்லது அவர்கள் ஊனமுற்று உழைப்புத்திறன் இழந்த குடும்பங்களைச் சேர்நத சிறுவர் சிறுமியர்களுக்கான இல்லமொன்றை ஆனைக்கோட்டையில் வட பிராந்திய இந்துப் பேரவை ஆரம்பிக்கவுள்ளது.

முப்பது சிறுவர்களும் 30 சிறுமிகளும் அடங்கலாக 60 சிறுவர் சிறுமிகள் முதற்கட்டமாக இதில சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இன, மத. ஜாதி பேதமற்று சிறுவர் சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும், இதில் இணைய விரும்புவோர் உடனடியாக விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவோ அன்றி தபால் மூலகமாகவோ சிவஸ்ரீ ப. சிவலோகநாதன் (கௌரவ செயலாளர்), வட பிராந்திய இந்துப் பேரவை, இல. 42, கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு எனும முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ]

## மின்சார நெருக்கடிக்கு 3 கட்டங்களில் தீர்வு

மின்சார நெருக்கடிக்கு 3 கட்டங்களில் தீர்வு காணும் வகையில் தனியார் துறையின் ஒத்துழைப்பைப் பெறுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த 10 ஆண்டுகளில் ஆயிரத்து 50 மெகாவோற் மின்னை நாட்டிற்கு வழங்குவதற்கு முன்வரும் தனியார நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இந்நிறுவனங்கள் தாமே இயந்திரத் தொகுதிகளை அமைத்து தாமே உரிமையாளராகவிருந்து தாமே நிர்வகித்து மின்னை வழங்க முடியும்.

ஒவ்வொரு ஆண்டும் 359 மெகாவோற் மின்னை புதிதாக உற்பத்தி செய்து தேசிய வழங்கலுக்கு கொடுக்கும் வகையில் இது அமையும். இதன் ஒரு கட்டம் 2004ஆம் ஆண்டிலும் அடுத்த கட்டம் 2007 இலும், 3ஆம் கட்டம் 2011 இலும் நிறைவேற்றப்படும்.

இலங்கை மின்சாரசபை இததனியார் நிறுவனங்களிடமிருந்து மின்னை 20 வருடங்களுக்கு கொள்வனவு செய்யும.

இதேவேளை இயற்கை வாயுவைப் பயன்படுததி 700 மெகாவோட் மின்னை உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்களைநிறுவி மூன்று கட்டங்களில் அதனை நிறைவேற்றித் தருவதற்கு அவுஸ்திரேலியா நிறுவனமொன்று முன் வந்துள்ளது.

(உ)

### ஆயுத முனையில்

## கள்ளமரம் தறித்தோர் செய்த அட்டகாசம்

(கொழும்பு)

வனபரிபாலன திணைக்களத்தின் 10 அதிகாரிகள் காட்டு மரங்களைத் திருடும் ஆயுதபாணிக் குழு ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டு மரங்களில் கட்டி வைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் ஆனமடுவ காட்டில் அண்மையில் நடைபெற்றது: காட்டு மரங்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு அதிகாரிகள் உடைகள் அகற்றப்பட்டு கட்டி வைக்கப்பட்ட நிலையில் அவர்களை ஆயுதந் தாங்கியவர்கள் உஷார் நிலையில் கண்காணித்துக் கொண்டு நிற்க அவர்களது கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் மரங்களைத் தறித்துக் கொண்டிருந்தனர்.

புத்தளம் வனபரிபாலன அலுவலகத்திற்கு இச் செய்தி கிடைத்ததும் ஆயுதபாணிகளாக ஊழியர்கள் அவ்விடம் நோக்கி விரைந்து செல்லும் போது வழியில் இடைமறித்த ஆயுதந்தாங்கிய குழுவினர் அவர்களைக் கடுமையாகத் தாக்கத் தொடங்கினார்கள்; அவர்களின் தாக்குதலில் இருந்து தப்பியோடிய ஒருவர் புத்தளம் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கவே அவர்கள் மரம் தறித்த இடத்திற்கு சென்ற போது கள்ள மரம் தறிப்போர் தப்பி ஓடி விட்டனர். மரத்தில் கட்டப்பட்டு தாக்குதலினால்பலத்தகாயங்களுக்குள்ளானவர்கள் ஆனமடுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மரம் தறிக்கும் ஆயுதபாணிக் குழுக்களுக்கு செல்வாக்குள்ள அரசியல்வாதி ஆதரவளித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(எ)

## பாராட்டு

(வட்டுக்கோட்டை)

பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் எழுதிய ''மரணங்கள மலிந்த பூமி'' நாவலுக்குத் தமிழ் நாட்டில் விருது. இலங்கையில் சாகித்திய விருது, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கப்பட்டமை குறித்து அவருக்கு ஒரு பாராட்டுவிழாவினை வலிகாமம் மேற்கு பிரதேச நலன்புரிச் சங்கம் அண்மையில் நடாத்தியுள்ளது.

(எ-216)

## சிந்தனைக்கு விருந்து

### நக்கலாய்க் கேட்கும்

''அப்பு!வீட்டில்நீங்கள் ஆச்சிக்குச் சொல்லிவிட்டோ இப்பக்கம சைக்கிளிலே வந்தீங்கள்?'' - தப்பான பக்கமாய் நான்கு பரலலாய் வந்தபொடி நக்கலாய்க் கேட்கும் நலைகத்து

'பழையவன்'

# நவீன உலகிற்கு ஏற்ப மாணவரை உருவாக்கிட
# ஆசிரியரின் உந்து சக்தியுள்ள ஆளுமை அவசியம்

துரை. ஆரோக்கியதாசன்
B. A, (Cey.) Sp. Trd.Dip. T.M., Dip-in-Edu.
(முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை

"கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி'' என்ற தத்துவ அடிப்படையில்மாணவரின் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர்தல் அவர்களின் வாழ்வு அவர்களுக்கும் சமூகத்திற்கும் பயனுறத் துலங்கச் செய்தல் ஆகிய பணிகள் ஆசிரியரின் ஆளுமையிலே தங்கியுள்ளன. ஆளுமையானது ஒருவரின் நடத்தைக் கோலங்களும் உளத்திறன்களும் மனவெழுச்சிகளும் சேர்ந்த உடல் உள அமைப்பைக் குறித்து நிற்கின்றது. அதாவது ஒருவனது உளச் சார்பு, அறிவு, மனப்பாங்கு கவர்ச்சி, சூழலுடனான இடை வினை என்பவற்றையும் இப் பண்புக் கூறுகள் அவனது சிந்தனை, உணர்ச்சி செயல் என்பவற்றல் ஏற்படுத்தும் தாக்கத்தினை அழுத்துவதும் ஆளுமை எனலாம். எலியட் என்பவர் ''ஒர் ஆசிரியன் உயர்தகைமையானது. சிரமமான பணிகளை ஒழுங்காகச் செய்வதில் மட்டும் தங்கியிருக்கவில்லை ஆனால் தமது உள ஒழுக்க ஆளுமையினாலும் முன்மாதிரியான நடத்தைகளினாலும் தமது மாணவர்களை வழிகாட்டி ஊக்குவித்தலில்தங்கியுள்ளது எனக் கூறியுள்ளார் லூசியன் செவே வரலாற்றுப் பொருள் முதல்வாத அடிப்படையில் தோன்றுகின்ற சமூக ஆக்கங்களுக்கு ஏற்றவாறு மனித ஆளுமை விருத்தியடைகிறது என்கிறார்.

பொதுவாகக் கற்பித்தல் என்பது மாணவரின் அறிவையும், திறனையும், மனப்பாங்கையும் மேலும்மேம்பாடடையச் செய்து அவனை முழு மனிதனாக்க வழிகாட்டுதலாகும். மரபுரீதியான கற்பித்தலிலும் ஒருபடி உயர்வாக அகராதியில் கற்பித்தல் என்றால் ஒருவிடயத்தை எவ்வாறு செய்வது எனக் காட்டுதல் அதைப்புரிந்து கொள்ளவைத்தல், நெறிப்படுத்துதல் இது நுணுக்கமாகத் துலங்குவதற்கு ஏன், என்ன, யாரால் என்பவற்றையும் உள்ளடக்கலாம். எனவே கற்பித்தல் கற்றல் செயற்பாடு வெற்றிபெறுவது ஆசிரியரின் ஆளுமையில் தங்கியுள்ளது.

மனிதவர்க்கம் இன்று ஒரு புதிய யுகத்தின் எழுச்சியின் வாயிலில் நுழைந்துள்ளது. கல்வியைப்பொறுத்தவரையில் அறிவு மிகத்துரிதமாகப் பரவிக் கொண்டு வருகிறது உலகின்துரித வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஏற்ப உகந்த கல்வியைதிட்டமிட்டுச் செயற்படுத்துவது ஆசிரியரின் ஆளுமையில் தங்கியுள்ளது.

வகுப்பறை நிர்வாகம்திறம் படச் செயற்பட ஆசிரியரின் ஆளுமையே மூலவேராகும். வகுப்பறையில் ஆசிரியரே முதல்நிலை முகாமையாளராவர் (First Line Managar) கற்றல் கற்பித்தற் செயற்பாடு அபிவிருத்தி பெறப் பாடசாலை என்ற கல்வி நிறுவனத்தின் இயல்பை கற்றல் அனைத்தும் கூட்டுணர்வு [Collegiality] மனப்பாங்கின் செயற்பாடாக அமைதல் விரும்பத்தக்கது. ஆசிரியரின் ஆளுமையைப் பொறுத்தே இச்செயற்பாடும் செம்மையுறும் அவரின் நடத்தையைப் பொறுத்துத் தொழிலில் வெற்றி வாய்க்கும்- மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்வதும், அவற்றை நெறிப்படுத்தலும் ஆசிரியரின் தனித்துவமான ஆளுமையில் தங்கியுள்ளது. மாணவர்களின் நிலையை அறிந்து, தெரிந்ததிலிருந்து தெரியாததிற்கு இட்டுச் செல்லும் அணுகுமுறையும் அவர் கையாளும கற்பித்தல் துணைச்சாதனங்களும், நவீன கற்பித்தல் முறைகளும் அவரின் சிறந்த தகுதி நிலையை உறுதிப்படுத்துவன. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லா மாணவரும்கற்றல்வேண்டும் என்ற நோக்கில் அவர்களின் தனியாள் வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு, அவற்றுக்குரியதான உளவியல் அணுகுமுறைகளைக் கையாள்வது ஆசிரியரின் ஆளுமையில் தங்கியுள்ளது.

பாடசாலை என்ற கல்வி நிறுவனத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடு அனைத்தும் அதன் அபிவிருத்தியில் தங்கியுள்ளது. சமுதாய முன்னேற்றமும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றியில் தங்கியுள்ளது. ஆகவே பாடசாலையில் உள்ள வளங்கள் அதாவது மனிதவளங்கள், பௌதிக வளங்கள், நிதி, காலம் ஆகியவற்றை திட்டமிட்டுச் செயற்படுத்துவது ஆசிரியர்களின் பங்களிப்பில் தங்கியுள்ளது. இப்பங்களிப்பு ஒவ்வொரு ஆசிரியரினதும் ஆளுமையை வேண்டி நிற்கின்றது. பாடசாலையில் ஆசிரியர்கள் தமது கடமை விடயங்களில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புச் செயற்பாடுடையவராகவும், சமூகத்திற்கு பொறுப்புக் கூறுபவராகவும் மேல்நிலை அலுவலர்களுக்கு நிர்வாக விடயங்களில் கணக்குக் கொடுப்பவராகவும் ஆசிரியர் தம்மை தயார்படுத்திக் கொள்வதும் அவரின் ஆளுமையில் தங்கியுள்ளது.

இவ்வாறு ஆசிரியர் முன்னின்று பாடசாலை, சமூகம் தொடர்பான பணிகளில் உழைக்கும் பொழுது ஆசிரியரின் ஆளுமை எழுச்சியுறும், தலைமைத்துவப் பண்பு வளர்ச்சியுறும் ஆசிரியர் மாணவ சமூக உறவில் மகிழ்ச்சிகரமான கல்வி நிலை ஏற்படும். ஆசிரியரின் நடத்தைக் கோலங்களே அவரின் ஆளுமையை எடுத்துக்காட்டுவன. ஆசிரியர் சமூக நலனுக்காகத் தன்னை அர்ப்பணிக்கும் பொழுதுதான் அவரின் ஆளுமையினால் சமூகம் பயன் பெறும். மாணவ உலகில் அவருக்கு இருக்கும் மகிமை மதிப்பிடற்கரியதாகும்.

ஆசிரியர் தம் கல்வித் தகைமையில் உயர்ச்சியும், தொழில் வாண்மைத்துவப் பயிற்சியும், பதவிநிலை உயர்வும் நேர்மையான முறையில் பெற முயற்சிக்கவேண்டும். வளரும் இளம் சமூகத்திற்கு உயிரூட்டமுள்ள கல்வியைச் சிறப்பாக அளிப்பதற்கு ஆசிரியர் கல்வி எனும் பயிரை வளர்க்கும் தோட்டக்காரனாகத் தம்மை அர்ப்பணிக்கவேண்டும். இதையே பெஸ்டலோசி செயலுருப்படுத்தினார். இவரின் வாழ்க்கை வரலாறே கல்வி வரலாறாகும். "நான் ஆசிரியனாகவே இருப்பேன், ஆசிரியனாகவே வாழ்வேன், என்றும், இவ்வாசிரியத் தொழிலால் நான் கவரப்பட்டுள்ளேன்'' என்றும் அவர் கூறினார். அவரின் வாழ்வு ஆசிரியரின் ஆளுமைக்குச் சிறந்த சான்றாகும்.

ஆசிரியரைப் பற்றி மாணவர்களிடம் நல்ல மனப்பாங்கிருந்தால் மட்டுமே ஆசிரியர்கள் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்குத் துணைபுரியலாம் ஆளுமை வளர்ச்சியில் பல்வேறு விதத்தில்ஆசிரியரின் ஆளுமை செல்வாக்குப் பெறும் அவை,

அ) ஆசிரியர்களின் தன்னாதிக்க, ஒருமைப்பாடு நடத்தை;

ஆ) ஆசிரியரின் வகுப்பறை நிர்வாக முறை;

ஆசிரியர் மாணவர்களின் கல்விமுயற்சி, தொழில்தெரிவு முதலியவற்றில் வழி காட்டுவதற்கு உதவுமுகமாக ஆளுமை அளவிடுதல் பற்றிய நுட்ப அறிவு பெற்றிருப்பின் கற்றல் கற்பித்தல் செயற்பாடு சிறப்பாக அமையும்.

ஆசிரியரின் ஆளுமையின் அடித்தளம் மனித நேயமாகும் இன்றுகற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர் மாணவஉறவாடல்பண்பு வலுப்பெற்றுவருகிறது. ஆசிரியர் தம் தொழில் பற்றுறுதி உடையவராகத் திகழவேண்டும். தாம் சமூகப் பணியாளன் என்ற உணர்வு ஆசிரியரின் உள்ளத்திலிருந்து உதயமாக வேண்டும். புன்னகை பூத்த முகத்தனாகவும், நகைச்சுவையாளராகவும், கடமை வீரராகவும், மாணவர் மேல் அன்பு, பரிவு கொண்டவராகவும், வழிகாட்டியாகவும் திகழும் ஆசிரியரே சிறந்த ஆளுமை உடையவரெனலாம்.

இன்று உலகம் அமைதி இழந்துள்ளது. மனிதநேயம் மறைகின்றது நாம் என்று வாழாமல் நான்என்ற ஆணவம் முனைப்பு பெறுகிறது 'உயிரின் மாண்பினை மதி, அன்றேல் அனைவருக்கும் அழிவு' என்றகுரல் வலுவிழந்துள்ளது. இருள் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் பிஞ்சு உள்ளங்களில் மனித நேயம் என்ற விதையை ஊன்றினால் அது முளைத்து, துளிர்த்து, மலர்ந்து, பழுத்து பாரெல்லாம் சாந்தி நிலைக்கும்.

ஆசிரியர்களின் ஆளுமையை மதிப்பீடுசெய்யும் சிறந்த நடுவர்கள் அவர்களின் மாணவர்களே என்றால் அது மிகையாகாது. மாணவர்களின் உள்ளக் கமலத்தில் உறைந்திருப்பது அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்கிய நல்லாசிரியர்களின் உருவங்களே என்றால் மாணவ உலகு அதனை ஏற்றுக் கொள்ளும். அதே வேளை ஆசிரியத்துவம் என்ற பண்பிற்கு ஏற்பத் தம் பணியினை நிறைவு செய்யாத ஆசிரியர்களின் தழும்புகள் மறைய வாய்ப்பில்லை. ஆசிரியர்களின் உன்னத பணி உயிரூட்டம் அளிக்கக் கூடியதாக அரசும், சமூகமும் ஆசிரியர்களின் வாழ்க்கை நிலையினை மதிப்பீடுசெய்து உரிய வேதனத்தையும் வழங்க வேண்டும் மேலும் சமூகசிற்பிகளான ஆசிரியர்களை வாழ் நாளெல்லாம் கௌரவித்தல் வேண்டும்.

ஆசிரியர்களின் ஆளுமை விருத்திக்கு தளமாக அமைவது கல்வித்தத்துவமாகும். ஆசிரியர் மாணவனை நவீன உலகிற்கு ஏற்ப ஆய்வு செய்து மாணவனின் கற்றலுக்கு வழி காட்டுவதுடன் அவன் வாழ்வு துலங்கச்செய்வதிலே அவரது உந்து சக்தி நிறைந்த ஆளுமை பெரும்பங்கு வகிக்கிறது.

யேசு, நபி, புத்தர், கொன்பியூசியஸ், திருவள்ளுவர் முதலியோர் உலகம் உய்வதற்குத் தம்மை உருக்கி ஒளியேற்றிய பேராசான்கள். இன்றும் இவர்கள் அணையாத தீபங்களாக திகழுகிறார்கள் அவர்களை ஆதர்சமாகக் கொண்டு ஆசிரியர்கள் பணியாற்றும் போது ஆசிரியரின் ஆளுமை செழுமைப்படும். □

# பின்லேடனுக்கு ஆதரவு வழங்கின் அதற்கான தண்டனை ஏற்கநேரிடும்
## தலிபானுக்கு பிரி. பிரதமர் எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிற்கு எதிராகஅமெரிக்கா தொடுத்துள்ளஉத்தேச யுத்தம்இஸ்லாமிற்கு எதிரான யுத்தமல்லஅதுபயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்று பிரிட்டிஷ் வெளிவிவகார செயலர் அஸ்ரோ தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான்மக்களுக்கு பி பி.சி உலகசேவை மற்றும் அமெரிக்காவின் வொய்ஸ்ஒவ் அமெரிக்கா போன்ற செய்தி ஊடகங்களின் மூலம்வழங்கிய பேட்டியில் இதனை தெரிவித்துள்ளார்.

பின்லேடன்சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் இதனைவிட்டு அவரை யாராவது மறைத்து வைக்கமுனைந்தால் பின்லேடனுக்கு வழங்கப்படும் அதே தண்டனைஅந்நபருக்கோ அல்லதுகுழுக்கள் மற்றும் அமைப்புக்களுக்கும் வழங்கப்படவேண்டும்இதுவே நியதி.

பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுக்க துணிந்தவர்கள் தண்டனையையும் ஏற்க துணிய வேண்டும் எனதலிபான் ஆட்சியாளருக்கு பிரிட்டிஷ் வெளியுறவு செயலர்எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை. நேற்றுபாகிஸ்தான் சென்ற பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் அமெரிக்கதி தாக்குதலுக்கு பின்லேடனே கர்த்தா என்பதனை முஷாரப்பிற்கு வலியுறுத்திக் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

# செச்சினியாவில் கெரில்லாக்களுக்குஎதிரான தாக்குதல் ஆரம்பம்

(மொஸ்கோ)

செச்சினிய கெரில்லாக்களுக்கு எதிரான தாக்குதல்களை ரஷ்யப்படைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

சில வாரங்களுக்கு முன்னர் 8 ரஷ்யஉயரதிகாரிகள்சென்ற உலங்குவானூர்தியைச்சுட்டு வீழ்த்தியதற்குப் பதிலடியாகவே தாக்குதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகக்கூறப்படுகின்ற போதிலும் ரஷ்ய அதிபர் புட்டின் அதனை மறுத்துள்ளார்.

ஆயுதப் பரிகரணம் பற்றிப் பேச்சு நடத்துவதற்கு விதிக்கப்பட்ட 72 மணிநேர அவகாசத்தை உரியவகையில்பயன்படுத்தக் கிளர்ச்சியாளர்கள் தவறிவிட்டனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது இவ்வாறிருக்க தற்போதுஆரம்பித்துள்ளமோதல்களினால 19 ரஷ்யப்படைகளும் 200 கிளர்ச்சிக்காரர்களும் பலியாகியிருப்பதாக உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-7)

# இந்தியாவின் ஒருங்கிணைந்த படை தலைவர் பதவியேற்பு

(புதுடில்லி)

இந்திய ஒருங்கிணைந்த படைத்தலைவராக லெப்டினன் ஜெனரல் பங்கஜ் ஜோசி பதவியேற்றுள்ளார். முப்படைகளின் அதிகாரிகளும் பல்வேறு பாதுகாப்புத் துறை மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சகங்களின் பணியாளர்களும் பங்கேய் ஜோசிக்கு உதவி செய்வார்கள்.

நேற்று முன்தினம் எளிய முறையில் பதவியை ஏற்றுக் கொண்டார். (து)

# சர்ச்சைக்கு உள்ளாகும கேட்லீயின் பந்து வீச்சு

(ஹராரே)

சிம்பாவேயில்கிரிக்கெட்சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் 'ஜேம்ஸ் கேட்லீயின்' பந்து வீச்சு பாணி சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

சிம்பாவேயுடனான முதலாவது ஒரு நாள போட்டியில் அறிமுகமாகிய 'கேட்லீ' 9:1 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கட்டுக்களைக் கைப்பற்றி இருந்தார்.

இவரது பந்து வீச்சுப்பாணி தொடர்பாக மத்தியஸ்தர் நவகூத் அலி கேள்வி எழுப்பி உள்ளதையடுத்துஇன்று இடம் பெறும் இரண்டாவது போட்டியில் தீவிரமாககண்காணிக்கப்படவுள்ளார். கடந்த காலத்திலும் கேட்லீயின்பந்து வீச்சு சர்ச்சைக்கு உள்ளாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இன்றைய தினம் பி.ப 5:00 மணிக்கு 'ஜீவன் பிரம்மம் ஐக்கிய வேதாந்த ரகசியம்' என்னும் பொருள் பற்றி வைத்திய கலாநிதி டாக்டர் சின்னப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-2)

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு

குறள்

# வலம்புரி

## குருபக்தி ஓங்குக!

ஒக்டோபர் 6 உலக ஆசிரியர் தினம், அறிவெனும் ஞானத்தை ஊட்டிய ஆசான்களை வருடத்தில் ஒரு நாளாவது போற்றி மகிழ வேண்டும் என்ற பெருநோக்குடன் அறிஞர் பெருமக்கள் உலக ஆசிரியர் தினத்தை அனுஷ்டிக்க ஏற்பாடு செய்தனர். "குருவில்லாத வித்தை பாழ்" என்பது போல் குருவைப் போற்றாத - குருவுக்கு நன்றி செலுத்தாத கல்வியாலும் பயனில்லை என்பது ஆன்றோர் கண்ட பட்டறிவு இதனால் தமிழர் கலாசாரத்தில் குருவுக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டது. எந்நேரமும் - எப்பொழுதும் குருவுக்குப் பக்தி செலுத்துவதே தமிழர் கலாசாரத்தின் சிறப்பு மிகு அம்சமாகும். இதனை "ஆசானைக் கண்டால் எவ்விடத்தும் அப்படியே" என்ற தனிப் பாடல் வரிகள் ஆதாரப்படுத்தியுள்ளன.

எனினும் சமகால நாகரிக மாற்றங்கள், தோழமைப் பண்புகளின் விருத்திகள் சமகால ஆசிரியனுக்கும் மாணவனுக்குமிடையேயுள்ள உறவில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் இடையேயிருக்கும் "குருபக்தி" தோழமை நட்பாக மாற்றமுற்றது இதனால் ஆசிரியர்களை விமர்சிக்கும் மாணவர்களும், மாணவர்களை இம்சிக்கும் ஆசிரியர்களும் கொண்டஓர் வகுதி உருவாகிவிட்டது.

இக்கால ஆசிரிய - மாணவ உறவில் ஓர் தலைகீழ் மாற்றம் ஏற்படுவதற்கு சமகாலகல்வி முறை முக்கிய காரணமாகும். குறிப்பாக தனியார் கல்வி முறை தோற்றம் பெற்றதையடுத்து, கல்வியில்வர்த்தகப் போட்டி ஏற்பட்டது இதனால், ஆசிரியர்கள் மீது மாணவர்கள் வைத்திருந்த குருபக்தி முறை நீங்கி தோழமை ஏற்பட்டது. தோளுக்கு மூத்தால் தோழன் என்பது போல், ஆசிரியர் - மாணவர் உறவு மாறியது.

இதனால் இன்றைய இளஞ் சந்ததி பெரியவர்கள் -முதியவர்கள் - வயதில் மூத்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய மதிப்பை, மரியாதையை செலுத்தத் தவறுகிறது. இத்தகைய விரும்பத்தகாத நிலைகள் மாற்றமுற வேண்டுமாயின் ஆசிரியர் - மாணவர்களின் உறவில் மீண்டும் குருபக்தி ஏற்பட்டாக வேண்டும்.

இதற்கு இன்றைய உலக ஆசிரியர் தினம் வழிவகுக்கட்டும்.

## புதிய அமைச்சர்களுக்கு
# ஒதுக்கப்பட்ட கடமைகள்பற்றி
# உரியவகையில் அறிவிக்கவில்லை

(கொழும்பு)

புதிய அமைச்சரவை சத்தியப் பிரமாணம் செய்து 15 நாட்களுக்கு மேலாகியும் ஒவ்வொரு அமைச்சிற்கும் என்னென்ன கடமைகள் ஒதுக்கப் பட்டுள்ளன என்பதுகுறித்து வர்த்தமாணியில் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பதுபற்றி அரசியல் உயர் வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகின்றது;

அரசாங்க அச்சகத்திற்குப் பொறுப்பான நெவில் நாணயக்காரா இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்; இவ்விடயம்பற்றி பலர் தன்னிடமும் விசாரித்து வருவதாகவும் அதுகுறித்து தனக்கு உத்தியோக பூர்வ அறிவித்தல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லைஎன்றும் குறிப்பிட்டுள்ளார்;

அமைச்சர்களை 20 ஆகக் குறைத்ததில், சில அமைச்சுக்களை வேறுசில அமைச்சுக்களுடன் இணைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு புதிதாக இணைக்கப்பட்ட நிலையில் அமைச்சுக்களின் செயலர்களும், அரசின் உயர்அதிகாரிகளும் தாம் சார்ந்த அமைச்சுக்களுக்குரிய கடமைகள்பற்றி எததகைய அறிவித்தலும் கிடைக்காத நிலையில் அதுபற்றி விசாரணையில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இத்தகைய நிலையில் திறைசேரியிலிருந்து அமைச்சுக்களுக்கு நிதி எடுப்பதிலும் பிரச்சினை உள்ளதாகவும் அறியப்படுகிறது;

(எ(

## கடந்த வருடம்
# இலங்கையில் 337 பெண்களுக்கு
# எதிரான வன்முறைச் சம்பவங்கள்
## யுனிசெவ் நிறுவனம் தகவல்

(கொழும்பு)

கடந்த வருடத்தில் இலங்கையில் மட்டும் பெண்களுக்கு எதிராக 337 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக யுனிசெவ் நிறுவனம் நடத்திய ஆய்வுகள மூலம் தெரியவந்துள்ளது.

76 சம்பவங்கள் சிறுமிகள் மீதான பாலியல் வல்லுறவு சம்பவங்கள் இவற்றில் 17 சம்பவங்கள் 10 வயதிற்கு உட்பட்ட சிறுமிகள் மீதான சம்பவங்கள்.

இதைவிட, 22 சிறுவர்களும் பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 49 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தரவுகள் தமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையானவை என்றும் மறைமுகமாக பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கக் கூடும் என்றும் யுனிசெவ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(உ-2)

## சமாதானத்தை கருப்பொருளாகக்கொண்ட
# இலங்கை மன்றக் கல்லூரியின்
# மரபு முறை 'சமவாயம்' இம் மாதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மன்றக் கல்லூரியின் வருடாந்த மரபுமுறை 'சமவாயம்' இம்மாதம் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

ஜனநாயகம், சமாதானம், நீதி சிறந்த ஆளுமை ஆகியவற்றை கருப்பொருளாகக் கொண்டு நடைபெறவுள்ள இந்த அமர்வை ஒட்டி கட்டுரை சுவரொட்டி சமர்ப்பணங்கள் கருத்துப் பரிமாற்றங்கள்,

சித்திரங்களினதும் புகைப் படங்களினதும் நூல்களினதும் பொருட்காட்சிக கூடங்கள் தகவல்கூடங்கள், கவிதை இசைத்தல் நாடகம் சிறுவர் நிகழ்ச்சி போன்றன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சமாதானக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல, குடும்ப சமுதாய மட்டத்தில் மனித உரிமைகளைப்போதித்தல் ஆளுமையின் தரத்தை மேம்படுததுவதில் குடிமக்களின் பங்கு கலப்பு கலாசாரப் புரிந்துணர்வு எனும் தலைப்புகளில் குழுக் கருத்துப் பரிமாறல்களும்;

இலங்கையின் கலாசாரப் பன்னிலைவளம் இலங்கையின் சமாதானத்தின்பாரியஆதாய உடமையாளர்களாக மக்கள் மக்களின் உரிமைகளுக்குக் கௌரவமளித்தல்சிறந்தஆளுமையும்அரசியல் கலாசாரமும எனும் தலைப்புகளில் மேடையேற்றல் கற்பனையிலான கலைப் படைப்புக்கள் ஆகியனவும் அறிக்கை செய்யபபடவுள்ளன.

மும்மொழிகளிலும் இப்போட்டி நடைபெறவுள்ளதாகவும் இது பற்றிய சுற்றறிக்கைகள் பல்கலைக்கழகங்களும் ஆசிரிய கலாசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுளளதாகவும் பணிப்பாளர் விஜய ஜயதிலக தெரிவித்துளளார்.

மனித உரிமைகளின் புரிந்துணர்வையும் சகல மக்களினதும் உரிமைகளின் மரியாதையாக விளங்கும் வாழ்க்கை வழியையும் மேம்படுத்துவதறகு ஜனநாயக வாழ்க்கை முறையில் சமூக அரசியல், பொருளாதார தொழில் முறைகளின் சுபீட்சத்திற்காக பாடு படும அமைப்பு இலங்கை மன்றக் கல்லூரிஎன்பதுஇங்கு குறிப்பிடத்தக்கது. (உ 106,

## கடமைகளை நிறைவேற்றாத
# சமாதான நீதிவான்களின்
# பதவி இரத்தாகும்

(யாழ்ப்பாணம)

கடமைகளைச் செய்யத்தவறும் அல்லது மக்களைப் பாதிக்கக்கூடிய செயற்பாடுகளிலும் பொறுப்பற்ற நடவடிக்கைகளிலும ஈடுபடும் சமாதான நீதிவான்களின் பதவியை இரத்துச்செய்யும்படி நீதியமைச்சர் பட்டி அமரக்கோன் அறிவித்துள்ளார்.

பொது மக்களின் அன்றாட தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக இலங்கையில் மொத்தமாக 30 ஆயிரம் பேர் சமாதான நீதிவானகளாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இந்த சமாதான நீதிவான்கள தமக்குஒதுக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதில்லை எனப் பொதுமக்கள் தரபபில் இருந்து முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் இருப்பதாகவும்;

இம் முறைப்பாடுகளை தனது கவனத்தற்குநீதியமைச்சர் கொண்டுவந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

(உ-19-9)

## தினசரி தியானம்
## சாரம் கட்டுதல்

பேய் போல் திரிந்து
பிணம் போல் கிடந்து பெண்ணைத்
தாய் போல் நினைத்துத்
தவம் முடிப்பது எக்காலம்

- பத்திரகிரியார்

உலகப் பொருள்களின் துணைகொண்டு இறைவா, உன்னை நான் நன்கு போற்றுவேனாக.

வீடு கட்டுதற்கு முதலில் சாரம் கட்டுகிறோம். சாரம் இல்லாவிட்டால் கட்டடத்தை உயரமாக எழுப்ப முடியாது. ஆனால் கடைசியில் சாரத்தைக் கலைத்தாக வேண்டும்; கடவுளை அடைதற்கு உடல் வாழ்வு சாரம். அவரை அடைந்தான பிறகு சரீரம் என்னும் சாரத்தைக் கலைக்க வேண்டும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## இன்று ஆசிரியர் தினம்

(நயினாதீவு)

நயினாதீவு கணேச வித்தியாலய ஆசிரியர் தினவிழா இன்று வித்தியாலய மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில் தீவக உதவிக் கல்விப்பணிப்பாளர் ஸ்ரீ ஜீ, விராதாகிருஷ்ணன்பிரதமவருந்தினராக கலந்து கொள்வார்.

[இ-213]

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகாவித்தியாலய ஆசிரியர் தின விழா இன்று காலை 10மணிக்கு பாடசாலை அதிபர் எ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் திருமதி. செ.நவரத்தினமும் சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் சங்கச் செயலாளர் இ ஏ.ஜெயனும்கலந்துகொள்வார்.

(ந-5-221)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர் தினவிழா கல்லூரியின் பழைய மாணவ சங்க உப தலைவர் ஜி.ரி. ஞானசேகரவேல் தலைமையில் இன்று முற்பகல் பத்து மணியளவில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் க. சட்டநாதன் கலந்து கொள்வார்.

(ந-4)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலய ஆசிரியர் தினவிழா இன்று காலை பழையமாணவர் சங்கச் செயலாளர் வி.தயாபரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்இந்து ஆரமப பாடசாலை அதிபா வே. ஞானகாந்தனும் சிறப்பு வருந்தினராக முன்னாள தொழில் நுட்பக்கல்லூரி அதிபா க.ஜெயரட்ணமும் கலந்துகொள்வர்.

(5)

★ ★ ★

(நயினாதீவு)

நயினாதீவு மகாவித்தியாலய ஆசிரியர்தினவிழா இன்று பிற்பகல்2மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் தீவகஉதவிக் கல்விப்பணிப்பாளர்சோ:தில்லைநாதன் பிரதமவிருந்தினராகவும் வேலணைபிரதேச சபைத்தலைவர் கருணாகர குருமூர்த்தி சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொளவர்.

(இ-213)

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி செலவபுரம் இளங்கோ சனசமூக நிலையத்தின் 29ஆவது ஆண்டு நிறைவுவிழாவும இலலமெய் வன்மைப் போட்டியும் நிலைய மைதானத்தில் இன்றும், நாளையும் நடைபெறவுளளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் நெல்லியடி அமைப்பாளர் பி ரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

(ந-218-4)

★ ★ ★

(புத்தூர்)

யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வு, பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

(உ-235)

# பொ. ஐ. ஐ. முன்னணிதொடர்ந்து ஆறு ஆண்டுகள் பதவியில் இருக்கும்

[ கொழும்பு ]

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தைக் கலைத்து அவசரமாக பொதுத் தேர்தலை நடத்தும்அளவுக்கு பலமிழந்து விடவில்லையென நெடுஞ்சாலைகள் முஸ்லிம் விவகார அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பியின் கூட்டு முறிந்து, பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, திடீர்த் தேர்தல் இடம் பெறப்போவதாக வெளியாகிய செய்திகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் பௌசி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், ஆறுவருடங்கள் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு பதவியில் இருக்கும். அதை எவராலும் அசைக்க முடியாது.

ஐ. தே, கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நாம்வெற்றி கொள்வோம். இதில் சந்தேகம் தேவையில்லை.

ஜே. வி. பி. மீது எமக்கு நம்பிக்கை இருக்கிறது. தொடர்ந்தும் அவர்கள் தமது ஆதரவை எமது அரசாங்கத்துக் குவழங்குவார்கள். இதில் சந்தேகமே இல்லையென்றும் கூறினார். (இ)

# குமரப்பா, புலேந்திரன் நினைவுநாள் அனுஷ்டிப்பு

(வவுனியா)

பலாலிராணுவத்தளத்தில் சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டலெப்கேணல் குமரப்பா, லெப், கேணல் புலேந்திரன் உட்பட வீரச்சாவடைந்த12 வீர வேங்கைகளின் நினைவுதின நிகழ்ச்சிகள் இராணுவ கட்டுப்பாடற்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சிறப்பாக கொண்டாடப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் சந்திகள் தோறும் பந்தல்கள் அமைத்து வீரச்சாவடைந்த 12 பேரின் திருவுருவப்படங்கள் வைத்து மக்கள்பெருமளவில் கூடிமலர் தூவி அஞ்சலிசெய்தனர்

இப்பகுதியில் எழுச்சிஊர்வலங்கள் நடத்தப்பட்டுநினைவஞ்சலிக் கூட்டங்களும் நடத்தப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது. (ம)

# ஊழியர்கள் வெளிநடப்பு

(வவுனியா)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் வவுனியா கிளை ஊழியர்கள் தமது சம்பள உயர்வு உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத் நேற்று நண்பகல் அலுவலகத்தை விட்டு வெளியேறி சுலோக அட்டைகளை ஏந்தியவாறு அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ந-4)

# வவுனியாவிலிருந்து பட்ட மளிப்புக்கான கோலவுடை வந்துசேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறவுள்ளபட்டமளிப்புவிழாவில் பட்டம்பெறவுள்ள பட்டதாரிகள் அணிவதற்குப் போதியளவு அங்கிகள் இல்லாமையினால் பல்கலைக்கழக வவுனியாவளாகத்தில் இருந்து சுமார் நூறு அங்கிகள் நேற்றுயாழ்பல்கலைக்கழகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

தற்போது பல்கலைக்கழத்தில் உள்ள அங்கிகள் 5அமர்வுகளில் இடம்பெறவுள்ள பட்டப்பெறும் மாணவர்களுக்குப்போதாமல் இருந்தமையினால் வவுனியா வளாகத்தில் இருந்துநூறு அங்கிகள் பெறப்பட்டதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

நேற்றும். நேற்றுமுந்தினமும் கொழும்புபலகலைக்கழகத்தில் சுமார்1550மாணவர்பட்டம்பெற்றிருக்கும் அதேவேளை யாழ்பல்கலைக்கழகத்தில் இன்று சுமார் 1528மாணவர்கள் பட்டம் பெறுவது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். [வ]

## துரைராசா நினைவு தங்கப்பதக்கம் மூவருக்கு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசாவின் ஞாபகார்த்ததங்கப்பதக்கம் கலைப்பீட 'பி' பிரிவுமாணவன் மரியாம்பிள்ளை மரியசீலனுக்கும்(விடத்தல் தீவு) 'ஏ' பிரிவு மாணவி செல்வி சந்திரமதிக்கும் விஞ்ஞானப்பிட மாணவன் ஐங்கரனுக்கும் கிடைக்கவுள்ளது. (வ)

# கஷ்டப்பிரதேசஅதிபர்களின் நிரந்தரநியமனம் வழங்க 3வருட சேவைபோதுமானது

( கொழும்பு )

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் உள்ள கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றும் தற்காலிக அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அவர்கள் பயிற்றப்பட்ட பின் 3வருடங்கள் ஆசிரிய சேவையாற்றியிருக்கவேண்டுமென்ற நிபந்தனையை கல்விச்சேவைகள் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளதென ஆணைக்குழுவின் செயலாளர் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்

முன்னர் நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றுவோர் பயிற்றப்பட்ட பின்னர் 7வருடங்கள் சேவையாற்றியிருக்க வேண்டுமென்ற பொதுவான நியந்தனையையே தற்போது மூன்று வருடங்களுக்குக் குறைக்க ஆணைக்குழு சம்மதித்துள்ளது. (வ)

# ஆசிரியர்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு இன்று காலை9.30மணிக்குசிரேஷ்ட மாணவ முதல்வன் எஸ். மனோதீபன் தலைமையில் பாடசாலையின் ஜேம்ஸ் லிஞ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கப்பொது முகாமையாளர் ஆர்.ராஜாராம் சிறப்பு விருந்தினராக என். செல்வநாயம் ஆகியோர்பங்கு கொள்ளவுள்ளனர்.

## பொ. ஐ. ஐ

கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகளை வைத்துக்கொண்டு எமது நிலைப்பாடுகளைத் தீர்மானிக்க வேண்டாம், எமது கொள்கையின் பிரகாரம எம் நாட்டுக்குரிய அரசியல் முறைமை எதுவென்பதில் நாம் உறுதியாகவே இருக்கிறோம்.

அரசுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையூடாக நாம சாதிக்கக் கூடிய விடயங்களை தடுத்து நிறுத்தும் பல பிரகிருதிகள அரசுக்குள் இருக்கிறார்கள். எனினும விவசாயிகளின் கடன்களை ரத்துச் செய்யும் முயற்சியில் நாமவெற்றி கண்டுளளோம்.

அத்துடன் பால்மா விலை அதிகரிக்கப்பட்ட போது அதனை ஒரு ரூபா 50 சதத்தினால் குறைத்தோம், அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்வுகோருகின்றனர். இதற்காக எம்மால் முடிந்ததைச் செய்வோம்.

எங்களது நடவடிக்கைகள் அனைத்துக்கும எதிரானவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுகளுள் இருக்கிறார்கள்.

இந் நிலையில் எங்களால் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சேவையையே செய்ய முடியும் என்றும் விமல் வீரவன்ச கூறினார். (இ)

## கோப்பாய்

நீதிமன்றில் ஆஜர்படுத்தாமலும் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகவும் மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுளளது.

இதேவேளை பிரஸ்தாப மாணவனைக் கோப்பாய்ப் பொலிசார் கடந்த மாதம் 18ம் திகதி வீட்டில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

இவர் தற்பொழுது காங்கேசன் துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

## மட்டு - திருமலை

நடத்தியிருந்தார்.

இச்சந்திப்பின் போது கரிகாலன் முஸ்லிம்மக்கள தமது பிரச்சினைகள் தொடர்பாக எம்மோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு பேச முடியுமென்று தெரிவித்திருந்தாரெனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## சேக்கிழார்

ழார் அடிபபொடி தில்லைஸ்தானம நடராஜன் இராமச்சந்திரன் நேற்று கொழும்பு வந்து சேர்ந்துளளார்.

கொழும்பில்இருந்து இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேரும் இவருக்கு இன்று மாலை நடைபெறும் பட்டமளிப்பு அமர்வில் இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும். (வ)

## தமிழ்க்கட்சி...

அமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை அவர்கள் தமது சார்பில் டாக்டர் சி. குணசிங்கத்தின் பெயரை அரசியல் நிர்ணய சபைக்கு முன்வைத்துள்ளனர்.

இதனை அடுத்து இது தொடர்பாக நேற்றுப் பாராளுமன்றக் கட்டடத்தில்நடைபெற்ற கூட்டத்தில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ் மாவட்டஎம்பியுமான வீ ஆனந்தசங்கரியும், ரெலோவின் வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும்வெளியேறினர்.

இதனைத் தொடர்ந்து அரசியல் நிர்ணய சபைக்கான பிரதிநிதியைத் தெரிவுசெய்வதில் தொடர்ந்தும இழுபறி நிலை காணப்பட்டமையால் முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை கூடி முடிவு எடுக்கவுள்ளதாக தமிழ்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாகஈ.பி.டி.பி நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தமிழ்க் கட்சிகள் சார்பில் பிரதிநிதியொருவரைத் தெரிவு செய்வதற்கான கலந்துரையாடலுக்கு கூட்டணியும், ரெலோவும் மறுப்புத் தெரிவித்து விட்டதாகவும் இதனால் ஒருமனதான தெரிவு இடம் பெறும் சாத்தியம் அற்றுப் போனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## முல்லைக்...

ஸ்தாபனம் ஒன்று செய்தி வெளியிட்ட போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து இச் செய்தி எழுதும் வரை எந்தவிதமான தகவல்களும் வெளியாகவில்லை எனினும கடற்படையினர் தரப்பிலும் பாரிய உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கலாமென நம்பப் படுகிறது.

இதேவேளை கடந்த மாதம் 16ம், 26ம் திகதிகளில் பருத்தித்துறைக் கடற் பரப்பிலும் முல்லைத்தீவுக் கடற் பரப்பிலும் பாரிய மோதல் சம்பவங்கள் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 200 இலங்கையர்

பேரை நெதர்லாந்து பொலிசார் நேற்றுக்கைது செய்துள்ளனர்.

நெதர்லாந்துரொட்டஹான் துறைமுகத்தினுடாக நுழைய முயன்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் நெதர்லாந்து பொலிசார் தெரிவித்துள்ளனர் இதேவேளை திருப்பி அனுப்பப்பட்டவர்களில் 43 பேர் வடகிழக்கைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [ந-4]

# கொக்குவில் இந்துவில் ஆசிரியர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஆசிரியர்தின விழா இன்றுகாலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் மாணவர்கள் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் இணைந்து நடத்தும் இவ்விழாவில், வாழ்த்துரையை கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் நிகழ்த்துவார்.

இதில் ஆசிரியர் பணியில் 25 வருட சேவையைப்பூர்த்தி செய்த சிரேஷ்ட ஆசிரியர்களான இ. மா. சிவசுப்பிரமணியம், சி. சிவகுமாரன், திருமதி எஸ். மகேஸ்வரநாதன், திருமதி வி. கணேசரத்தினம், திருமதி அ. சண்முகலிங்கம் ஆகியோர் ஆசிரியர் கழகத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர். (ந)

## ஈழத்தமிழ்...

காட்டி வருகின்றன.

வன் முறைக் கலாசாரத்தினைக்கைவிட்டு சட்டம் ஒழுங்கு நடைமுறைகளைப் பேணுமாறு இளைஞர்களிடம் கனடா தமிழர் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. இந்தவிடயம் தொடர்பாக கனடா பொலிசாரும், கோஷ்டி மோதல் தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொள்வதற்கும் அவர்களைக் கைது செய்வதற்கும் உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனடாவில் வி.வி.ரிகுழுவும் ஏ.கே. கண்ணன் குழுவுமே இத்தகைய வன்செயலகளில் ஈடுபட்டுவருவதாகக்கனடாப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (ம)

# கிணற்றிலிருந்து எறிகணைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சங்கத்தானை இந்துக் கல்லூரிக்கு அருகிலுளள கிணறு ஒன்றிலிருந்து 6க்கும் மேற்பட்ட எறிகணைகள் படையினரால் மீட்கப் பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் இக் கிணற்றினைத் துப்பரவு செய்து கொண்டிருந்த சமயம் எறிகணைகள் தென்பட்டதையடுத்து உடனடியாக படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டு அவை மீட்கப்பட்டன.

இதேவேளை சாவகச்சேரி வடக்கு மருதடிப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றினை துப்பரவு செய்த சமயம் அங்கு காணப்பட்ட ஒரு தொகைரவைகள் மீட்கப்பட்டுள்ளது. (ந-5-10)


# துயர் பகர்கின்றோம்

## திரு. கந்தையா திருநாவுக்கரசு

தேசிய சர்வோதய சிரமதான சங்க யாழ் மாவட்ட ஆரம்பகால சேவையாளரும் தற்போதைய வட இலங்கை சர்வோதய பொறுப்பாளருமான அமரர் திரு. கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேசிய சர்வோதய சிரமதான சங்கம்,
தேசிய யாழ் மாவட்ட கிளை,
சுண்டுக்குளி.

தலைமையகம் மொறட்டுவ (இ/ 2684)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபரும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவனும்சிறந்த எழுத்தாளருமான

## திரு. வை. குணசேகரம்

அதிபர் தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு, இன்றைய உலக ஆசிரியர் தினத்தில் அவரை உள மகிழ்ந்து பூத்துக்குலுங்க வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
பழைய மாணவ நண்பர்கள்
(கி/2685)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.